வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 22.05.2023 திங்கட்கிழமை இதழ் : 164 பக்கங்கள் : 16

## நாணய நிதியத்தின் 2ஆவது தவணை கடன் கிட்டியதும் ஜனாதிபதி தேர்தல்!

கொழும்பு, மே 22

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இரண்டாவது தவணை கடன் கிடைத்ததும் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தலை விரைவுபடுத்தும் வகையில் அ ரசமைப்பு திருத்தத்துக்கு எதிர்க் கட்சிகள் முழு ஆதரவைத் தெரிவித்துள்ளன. இதையடுத்து, அதனை விரைவாக உருவாக்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று உயர்மட்ட அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே அரசாங்கத்தின் திட்டமாக உள்ளது. எதிர்வரும் செப்ரெம்பரில் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணையை பெற்றுக் கொள்ளப்படும். இதன் பின்னர் மக்களுக்கு சலுகைகளை

15

## சிங்கள - பௌத்தம் என்பது தவறு புத்தர் இந்துவாகவே வாழ்ந்தார்!

### புலிகள் விகாரைகளை உடைத்ததாக கூறமுடியாது

### நயினாதீவு ரஜமஹா விகாராதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 22

தையிட்டி விகாரை தமிழர் நிலங்களை களவெடுத்து கட்டிய விகாரை எனவும் நயினா தீவு ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.


தமிழ் இணையத்தளம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

"30 வருட போர் காலத்திலும் எங்களுக்கு எவ்வித பிரச்சனையும் காணப்படவில்லை. தென்னிலங்கை வாழ் மக்களுக்கு உண்மை

15

# செப்ரெம்பருக்கு முன்னர் கடன் சீரமைப்பு நிறைவு!

### ஜனாதிபதி ரணில் நம்பிக்கை



கொழும்பு, மே 22

**"கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை செப்ரெம்பர் மாதத்துக்குள் இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்து பொருளாதாரத்தை ஒரு நிலையான நிலைக்கு கொண்டுவரமுடியும்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருளாதாரக் கொள்கை ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த பொருளாதாரக் கொள்கைக்கு பொதுஜன பெரமுனவும் தேவையான

15

## தனியார் வகுப்புகள் இனி ஞாயிறு இல்லை!

யாழ்ப்பாணம், மே 22

ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15

## ஜி. எஸ். பி. பிளஸ் வரி சலுகையை பெறுவோம்!

### அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, மே 22

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளுக்குத் தகுதி பெறுவதற்கான அனைத்து விதிமுறைகளுக்கும் இலங்கை இணங்கியுள்ளது. எனவே, மேலும் புதிய சுற்றுச் சலுகைகள் அறிவிக்கப்படும்போது அவற்றை மீளப் பெறுவதில் நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் அண்மையில்

15

## கிளிநொச்சி பொறியியல் பீடத்துக்கு மாணவர்களை உடன் அனுமதிக்குக!

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்குக் காத்திருப்புப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உடனடியாக அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

திறமை ஒழுங்கில் வெற்றிடங்களை நிரப்பும் முகமா கத் தெரிவு செய்யப்படும் மாணவர்களை பதிவு செய்வ தற்கு அனுமதிக்காமல் திருப்பி

15

## இந்துக்களும் பௌத்தர்களும் மதம் மாற்றப்படுகின்றார்கள்!

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சாடல்

கொழும்பு, மே 22

இந்த நாட்டில் இந்து - பௌத்த குடும்பங்கள் அதிகளவில் மதமாற்றம் செய்யப்படுகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பௌத்த சங்கக் கூடத்தில் பங்கேற்று பேசியபோதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

மேலும், "இன்று இந்த நாட்டிலுள்ள பௌத்தக் குடும்பங்களும் வடக்கில் உள்ள இந்துக் குடும்பங்களும் வேறு அமைப்புகளுக்கும் வேறு தத்துவங்களுக்கும் மாறி

15

## திருகோணமலை உட்பட 59 மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாகின

கொழும்பு, மே 22

மழையுடனான காலநிலை தொடர்வதால் டெங்கு நோய் பரவல் தீவிரமடைந்துள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள 370 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் திருகோணமலை உட்பட 59 பிரிவுகள் அதி அவதானத்துக்குரிய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

15

## பொறுப்புக்கூறலை செய்யாத அரசு கோபப்படுவதில் அர்த்தமில்லை!

### சுமந்திரன் எம். பி. சொல்கிறார்

யாழ்ப்பாணம், மே 22

"பொறுப்புக்கூறல் விவகாரத்தை பொறுத்தமட்டில் இதுவரையில் இலங்கை அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. இது தொடர்பில் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கை நடுநிலையுடன் இருக்கவேண்டுமானால், அது சர்வதேச பொறிமுறையாக அமைய வேண்டியது அவசியம்."

இவ்வாறு, தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வெளியிட்ட அறிக்கை யில், நடந்தது இனவழிப்பு போர் என்று கூறியிருந்தார். அவரின் இந்த கருத்தை கடுமையாக கண்டித்து

15

## கணினி, கைபேசி உட்பட ஆயிரம் பொருட்கள் மீதான தடை தளரும்!

கொழும்பு, மே 22

கைபேசி, கணினி, தொலைக்காட்சி பெட்டி, அழகு சாதனப் பொருட்கள், வீட்டு உபகரணங்கள் என இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட சுமார் ஆயிரம் பொருட்கள் மீதான தடையை நீக்க நிதி அமைச்சு பரிசீலித்து வருகின்றது என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு - டொலரை சேமிப்பதற்காக கடந்த 2020 மார்ச்சில் சுமார் 3 ஆயிரம் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டன.

இவ்வாறு தடை விதிக்கப்பட்ட கணினி, கைபேசி, தொலைக்காட்சி பெட்டி, வீட்டு உபகரணப் பொருட்கள், எழுதுபொருட்கள், அடைக்கப்பட்ட உணவுப்

15

## இப்படியும் நடக்கிறது...!

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் தனது ஒலிபரப்பு வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் 'பி. பி. சி. தமிழோசை'யில் இன்று வரை பணியாற்றி வருபவர் விமல் சொக்கநாதன்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தையே தமிழோசையில் கேட்டு அதுபற்றி அறிந்து கொள்ளும் நிலையில் யாழ்ப்பாண பத்திரிகைகள் இயங்கிய காலத்தில் ஈழத்துச் செய்திகளை தனக்கே உரிய அழகு தமிழில் தமிழோசையில் செய்தி அறிக்கையிட்டவர் விமல்.

பிரிட்டனில் சட்டத்துறையில் பணியாற்றிக்கொண்டு, தனது ஊடக வாழ்வைத் தொடர்ந்து வருபவர். கூடவே, எழுத்தாளராக. பல்வேறு பத்திரிகைகளிலும் தொடர்ந்து பத்தி எழுத்துக்களை எழுதிவருபவர்.

எந்த விடயங்களையும் எவர் மனதும் நோகாமல் நகைச்சுவையாக- நாசூக்காக சொல்வதில் அவரின் எழுத்துக்கள் பலரின் கவனத்தையும் பெறுவதுண்டு. அவர் பல்வேறு பத்திரிகைகளில் எழுதிய அவ்வாறான கட்டுரைத் தொகுப்பாக "லண்டனிலிருந்து விமல்" என்ற நூலை வெளியிட்டிருந்தார். அந்த நூலின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கலையரங்கில் நடைபெற்றது.

இந்த விழாவில் உலகத் தமிழ் அறிவிப்பாளர் என்று அடைமொழியுடன் அழைக்கப்படுபவரும் விமலின் ஆரம்ப கால இலங்கை வானொலி நண்பருமான பி. எச். அப்துல் ஹமீட்டும் கலந்துகொண்டு தமது இளமைக்கால சம்பவங்களை நினைவுகூர்ந்தார்.

அவர் தனது உரையில் ஒரு விடயத்தை மிகுந்த மனத் தளர்வுடன் சொன்னார். "நாங்கள் வானொலிக் கலைஞர்கள் வானொலியில் இருக்கும் வரைதான் மக்கள் எங்களை நினைவில் வைத்திருக்கிறார்கள். காற்றோடு எங்கள் நினைவுகளும் கரைந்துவிடுகின்றன." என்று.

விமல் அப்படியில்லாமல் தனது எழுத்துக்கள் மூலம் தொடர்ந்து வாழ்வார் என்பதை நினைவுபடுத்துவதற்காக அவர் அப்படிச் சொல்லியிருக்கவேண்டும்.

அண்மையில், இலங்கை வானொலியில் பணியாற்றிய மூத்த கலைஞர் ஒருவரின் நினைவாக அண்மையில் ஒரு நிகழ்ச்சியை இலங்கை வானொலி நடத்தியிருந்தது. அந்த நினைவு நிகழ்ச்சியில் தான் கலந்து கொண்டு அந்தக் கலைஞரை நினைவு கூர்ந்த மறுதினம் வானொலியின் தலைவரின் தனிப்பட்ட செயலாளர் தொடர்புகொண்டு, நீங்கள் அந்தக் கலைஞரைப்பற்றி பேசியதை கேட்டோம். நாங்கள் புதிதாக கட்டவிருக்கும் கலையகத்துக்கு அந்தக் கலைஞரின் பெயரை வைக்கலாமா? என்று இவரிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்.

அதற்கு ஹமீட், அவருக்கு முன்னர் அவரைவிட மிகப் பெரிய ஆளுமைகள் பலர் பணியாற்றியிருக்கிறார்கள். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் புதல்வர் நடராசன், சோ. சிவபாதசுந்தரம் என்று ஒரு பட்டியலை சொல்லி அவர்களுக்கும் கலையகம் கட்டுவீர்களா என்று கேட்டிருக்கிறார். அதற்கு தலைவரின் செயலாளர் கேட்டாராம் "இவர்கள் எல்லாம் யார்?" என்று,

ஆக, வானொலி கலைஞர்களை இப்படித்தான் எல்லோரும் மறந்து விடுகின்றனர் என்று ஹமீட் ஆதங்கப்பட்டமை நியாயமானதுதான்.

ஆனால், சோ. சிவபாதசுந்தரம் வானொலி கலைஞர் மாத்திரமல்லர், பிற்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்தபோது உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்தவர். உலகத் தமிழ் மக்கள் நன்கறிந்த ஒரு மிகப்பெரிய தமிழ் அறிஞர். அவரைத் தெரியாது என்று சொன்ன அந்தத் தலைவரின் செயலாளருக்காக அவர் கவலைப்பட்டிருக்க வேண்டுமே தவிர, கலைஞர்களுக்காக அல்ல.

நான் இன்று சொல்ல வருவது இதையல்ல. அவரின் இந்த ஆதங்கத்தைக் கேட்டபோது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது வேறு ஒரு சம்பவம்.

அவுஸ்திரேலியாவிலிருந்து சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த ஒரு நண்பர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு முக்கிய அதிகாரியை சந்திக்க விரும்பினார். அவரை அழைத்துக் கொண்டு அந்த அதிகாரியின் அலுவலகத்துக்கு சென்றிருந்தோம். அங்கு நாங்கள் சென்றிருந்தபோது அவர் வேறு ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்ததால், வெளியே காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. அப்போது தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரஹாசனும் அந்த அதிகாரியை சந்திக்க வந்திருந்தார். அவர் வெளியே காத்திருக்க, நாம் அந்த அதிகாரியை சந்திக்க உள்ளே சென்றுவிட்டோம்.

அவுஸ்திரேலியாவிலிருந்து வந்திருந்த நண்பர் இந்த அதிகாரி பல்கலைக்கழகத்தில் படித்த போது ஒரே காலத்தில் வேறு துறையில் படித்தவர். இருவரும் பல்கலைக்கழக காலத்து கதைகளை கதைத்துக் கொண்டிருந்ததில் நேரம் போனது தெரியவில்லை. அப்போது வெளியே சந்திரஹாசன் காத்திருப்பது நினைவுக்கு வர, அந்த அதிகாரியிடம், "ஐயையோ... மறந்தே விட்டோம். வெளியே தந்தை செல்வாவின் மகன் காத்திருக்கிறார்" என்று நான் சொல்ல அந்த அதிகாரி கேட்டார், "யார் தந்தை செல்வா?" என்று.

இந்தக் கதையைப் படித்தால், ஹமீட், வானொலிக் கலைஞர்களை மக்கள் மறந்துவிடுவதை நினைத்து கவலைப்படமாட்டார்.!

- ஊர்க்குருவி

# கௌரவமாக வாழ நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மே 22

வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு கௌரவமாக வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கேகாலை அரநாயக்க "அசுபினி எல்ல நீர் விநியோகத் திட்டம்" பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க, மாவனல்ல, ரம்புக்கன பிரதேச செயலகங்களுக்குரிய 135 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நிலவிய குடிதண்ணீர் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கத்தின் 3,847 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு,



நெதர்லாந்து அரசாங்கத்தின் 18,650 மில்லியன் ரூபா கடனுதவியின் கீழ், இந்த நீர் விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (ஐ)

# அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல்; ரணிலை தெரிவு செய்வது முக்கியம்!

### ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, மே 22

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதுடன், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஒரு தடவை தெரிவு செய்வது நாட்டுக்கு முக்கியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தேசம் பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்தப்பட வேண்டுமாயின் தற்போதைய ஜனாதிபதி ஐந்தாண்டுகளுக்கு நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் என கம்பஹாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பலமண்டல கூட்டத்தில் விஜேவர்தன தெரிவித்தார்.

"ஜனாதிபதி விக்ரமசிங்க பொருளாதார நெருக்கடியை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கணித்தார். கோவிட் தொற்றுநோய் வெடிப்பதற்கு முன்பே அவர் பொருளாதார வீழ்ச்சியைக் கணித்தார். அவரால் நாட்டை நியாயமான அளவில் ஸ்திரப்படுத்த முடிந்தது. கிரீஸ் ஒருவித ஸ்திரத்தன்மையைப் பெற பத்து ஆண்டுகள் ஆனது. எவ்வாறாயினும், இலங்கை குறுகிய காலத்தில் ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்ந்துள்ளது. எனவே விக்கிரமசிங்க இன்னும் ஐந்து வருடங்களுக்கு நாட்டை ஆள வேண்டும்" என்று அவர் கூறினார்.

"அனைத்து கட்சிகளும் அரசியல் வேறுபாடுகளை மறந்து தேசத்தின் சார்பாக தேசிய கொள்கைகளை உருவாக்க ஒன்றுபட வேண்டும்." சில எதிர்க்கட்சி மாவட்ட அமைப்பாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று அவர் மேலும் கூறினார்.

# சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபாலவே!

### தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, மே 22

சுதந்திர கட்சியின் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே களமிறக்கப்படுவார் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவே ஜனாதிபதி வேட்பாளர் என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சி அறிவித்துள்ள போதிலும், அவருக்கு ஆதரவை வழங்குமாறு இதுவரையில் தம்மிடம் எந்தவொரு கோரிக்கையும் விடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# இடர் முகாமை குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 22

அரச, அரச சார்பற்ற தனியார் மற்றும் பொது அமைப்புகளை ஒன்றிணைத்து இடர் முகாமைத்துவ முன்னாயத்த வலைப்பின்னல் அமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கில் இடர் முகாமைத்துவத்தில் இணை செயல்பாடு என்னும் தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு றில்கோ ஹோட்டல் முதலாம் மாடியில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

ஆசிய - பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்தக் கலந்துரையாடலில், கரையோர பிரதேசம் வாழ் மக்களின் இடர் முகாமைத்துவம் மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகளை விரிவாக்கல், பாடசாலை மாணவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ அடிப்படை அறிவுநிலைகளை வலுப்படுத்தி பயிற்சிகளை வழங்குதல், அரச தனியார் மற்றும் பொது அமைப்புகளின் காத்திரமான இணைந்த செயல்பாடுகளை வலுப்படுத்தி நீடித்த நிலைப்பாட்டை உருவாக்குதல் ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. (ஐ)

# இறக்குமதியாகும் முட்டைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு

கொழும்பு, மே 22

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளின் அளவை அதிகரிப்பதில் அரச வர்த்தக கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

மூன்று அதிகாரிகள் ஏற்கனவே இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு விசாரணை நடத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது முட்டைகளை இறக்குமதி செய்யும் பண்ணைகளை உரிய அதிகாரிகள் அவதானித்து நாட்டுக்கு வந்த பின்னர் அறிக்கை வழங்க வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம் 10 இலட்சம் இந்திய முட்டைகளை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu 22.05.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒன்றுபட்டால் மட்டுமே?

குறிப்பிட்டளவான எண்ணிக்கையானவர்களுடன் - அதில் பெரும்பான்மையினர் இறுதி யுத்தத்தின்போது தங்களின் பிள்ளைகளை இழந்தவர்கள் - இன்னொரு சிறிய தரப்பினருக்குள் பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் கட்சிகளின் பங்குபற்றலுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றுப்பெற்றுவிட்டது. யுத்தம் முடிவுற்று 14 வருடங்கள் கடந்துவிட்டன. தமிழர் நோக்கில் ஓர் இனப்படுகொலை நடைபெற்று 14 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், சாதாரண மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி வரவில்லை. முள்ளிவாய்க்கால் தொடர்பில் கூறப்படும் கதைகளால், கஞ்சிப் பாடல்களால் ஈர்க்கப்படவில்லை.

இதில் கவனத்துக்குரிய பக்கம் என்னவென்றால், இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் எனவும் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர் என்றும் தமிழ் அரசியல் தரப்பினர் தொடர்ந்தும் கூறிவருகின்றனர். அவர்களுக்கான நீதியை கோருவதே தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான இலக்காகக் கருதப்படுகின்றது. அவ்வாறாயின் அவ்வாறு பிள்ளைகளை - உறவினர்களை இழந்தவர்கள் தங்களின் கவலைகளை பகிர்ந்துகொள்வதற்காக ஏன் முள்ளிவாய்க்காலில் திரளவில்லை? முள்ளிவாய்க்காலுடன் தொடர்புடையவர்கள் வரவிலையென்றால் அதனை நாம் புரிந்துகொள்ளலாம் - ஆனால், ஏன் தங்களின் உறவுகளை இழந்தவர்கள் வரவில்லை? அவ்வாறாயின், இனப்படுகொலை கதைகளை மக்கள் பொருட்படுத்தவில்லையா? அல்லது பல்லாயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர் என்னும் கதை மிகைப்படுத்தப்பட்டதா? அல்லது தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் பிரிந்து நின்று நினைவுகூர்தலுக்காக சண்டையிடுவதால் மக்கள் தங்களின் கவலைகளை வீடுகளுக்கு வெளியில் கொண்டுவர விரும்பவில்லையா?

இனப்படுகொலை நடைபெற்றதாகக் கூறிக்கொள்ளும் அரசியல் தரப்பினர் மத்தியில் இனப்படுகொலை நடைபெற்ற இனமொன்றின் பிரதிநிதிகளுக்கான ஒழுங்கையும் - நேர்மையையும் காணவில்லை. உயிரிழந்தவர்களின் மீதான பரிவு தேர்தல் கணக்குகளின் அடிப்படையில்தான் திட்டமிடப்படுகின்றது. இதனை அறியாதளவுக்கு மக்கள் அப்பாவித்தனமாக இருப்பார்களென்று தொடர்ந்தும் நாம் நம்பிக்கொண்டிருக்க முடியுமா? பொங்கல் பானை வைப்பதை படமெடுப்பது போன்று முள்ளிவாய்க்கால் கஞ்சிப்பானை வைப்பதை ஓர் அரசியல் வேலைத்திட்டமாகவே கட்சிகள் முன்னெடுக்கின்றன. கஞ்சிப் பானையில் அரிசி இடும் படங்கள் முகநூல்களில் பகிரப்படுகின்றன. இதுதான் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலியா? முள்ளிவாய்க்காலில் சந்தித்துக் கொண்ட அரசியல்வாதிகளின் ஒளிப்படங்கள் இணைய ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் சிரித்தவாறு, தங்களுக்குள் உரையாடும் படங்கள் வெளியாகியிருக்கின்றன. ஓர் அரசியல் சடங்காகவே நினைவுகூர்தல் கழிந்து செல்கின்றது.

இனியும் அவ்வாறுதான் நிகழும். இப்போது கூடிய மக்கள் கூட அடுத்துவரும் ஆண்டுகளில் கூடுவார்களா என்பது சந்தேகமே! இதன் மூலம் பொதுக் கட்டமைப்பு, பல்கலைக்கழக மாணவர்களின் செயல்பாடுகளும் மக்கள் மத்தியில் பெரிதாக நோக்கப்படவில்லை. அந்த வகையில் அவர்களின் முயற்சியும் தோல்வியடைந்துவிட்டது. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள், பொதுக்கட்டமைப்பு என்போர், மாணவர்கள் அனைவரும் ஓரணியாக நின்றால் இதற்கான தலைமைத்துவத்தை அனைத்து கட்சிகளும் வழங்குமாக இருந்தால் - ஓரளவு மக்கள் வெளியில் வரக்கூடும். இல்லாவிட்டால், இந்த நினைவு கூரல்கள் ஒரு சிறிய குழுவுக்கான விடயமாகவே சுருங்கிப்போகும்.

# பிரச்னைகளில் இருந்து விடுபடுவதற்கு யாழ். வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்!

*யாழ்ப்பாணம், மே 22*

யாழ்ப்பாணம் மாவட்ட வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் - எதிர்காலத்தில் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து விடுபடும் நோக்கில் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில், அந்த அமைப்பு வெளியிட்ட அறிவுறுத்தலில்,

வர்த்தகர்கள் தங்கள் வருமானத்துக்கு ஏற்ப திட்டங்களைத் தொடங்குவது சிறந்தது. வர்த்தக நடவடிக்கைகளிலும், முதலீட்டு நடவடிக்கைகளிலும் மற்றும் கடன்பட்டுத் தொடங்கும் நடவடிக்கைகளிலும் திட்டமிடல் இல்லாமல் எந்தக் காரணம் கொண்டும் செயல்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். எப்போதும், நலன் சார்ந்த முதலீடுகள் மேற்கொள்ளும்போது ஆலோசனைகளைப் பெற்றுச் செய்யுங்கள்.

வர்த்தகர்கள் அளவுக்கதிகமான பொருட்களை கொள்வனவு செய்வதைத் தவிர்த்து, தங்களது வர்த்தக ஸ்தாபனம் அமைந்துள்ள சூழலில் மக்களின் தேவைக்கேற்ப பொருட்களைக் கொள்வனவு செய்தல் சிறந்தது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களின் விலையின் தளம்பல்கள் ஏற்படுவதனால் நீங்கள் ஒவ்வொரு பொருட்களையும் கொள்முதல் செய்யும்போதும் அதிகளவான பொருட்களைக் கொள்வனவு செய்வதை மிகவும் அவதானத்துடன் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும்போது சட்டரீதியாக அதனைச் செயல்படுத்தல் வேண்டும். விலைக் கட்டுப்பாடு, விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்துவதுடன், காலாவதியான பொருட்களை விற்பனை செய்வதைத் தவிர்த்தல் போன்றவற்றில் அதி முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களைக் கொள்முதல் செய்வது மற்றும் விற்பனை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளல். மேலும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வரி நடைமுறைகள் தொடர்பாக தகுந்த கணக்காளர்களின் ஆலோசனையைப் பெற்று வியாபார நடவடிக்கைகளைச் செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன், தற்போதுள்ள நாட்டின் பொருளாதார நெருக்கடியில் விலை ஏற்ற இறக்கம் காரணமாக பல கம்பனிகள் தமது பொருட்களின் விலைகளில் விசேட விலைக்கழிவு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதால் வர்த்தகர்களும் அதன் பயனை பாவனையாளர்களுக்கு வழங்க முன்வரவேண்டும். அத்துடன், இதன் போது உங்களுக்கு ஏற்படும் இலாப, நஷ்டங்களை உரிய கம்பனிகளுடன் கலந்துரையாடி நிவர்த்தி செய்து கொள்ள முடியும். அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் தராசுகள் மட்டும் பாவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும், வடமாகாண பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குமாக தங்கள் ஸ்தாபனங்களில் முடிந்தளவு உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் - என்றுள்ளது.

(ஐ)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து வயலுக்குள் பாய்ந்தது பேருந்து

*யாழ்ப்பாணம், மே 22*

வட்டுக்கோட்டையில் வயலுக்குள் பாய்ந்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து ஜே. சி. பி. இயந்திரத்தின் உதவியுடன் பொதுமக்களால் மீட்கப்பட்டது.




நேற்று ஞாயிற்றுக் கிழமை மதியம் வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையம் அருகில் பயணித்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வயல்வெளிக்குள் பாய்ந்தது. அந்த பேருந்து பயணிகள் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. இதனால் பாரதூரமான விளைவுகள் தவிர்க்கப்பட்டன.

விரைந்து செயல்பட்ட பொதுமக்கள் ஜே. சி. பி. இயந்திரத்தின் உதவியுடன் பேருந்தை தூக்கி வீதிக்கு கொண்டு வந்தனர்.

இந்த சம்பவம் காரணமாக அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதுடன் பேருந்தின் ஏறும் படிகள் பலத்த சேதமடைந்தன.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகள் சரியாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம்தொடங்கும் நாள்.

**இடபம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளரிடம் கனிவாகப் பழகுங்கள். அதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டிமுன்னேறும் நாள்.

**கடகம்**

உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரதை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் திறமை வெளிப்படும். கடமை உணர்வுடன் செயல்படும் நாள்.

**கன்னி**

உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். மதிப்பு கூடும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**

பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**

எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் உங்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். புது யுக்திகளை கையாளுவீர்கள். உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மகரம்**

குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**

தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் உங்களிடம் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

# கள்ளச்சாராய ஒழிப்பு விவகாரத்தில் ஆளுநர் நேரடியாக தலையிடவேண்டும்!

## தமிழ்நாடு பா. ஜ. க. நேரில் வலியுறுத்து

சென்னை, மே 22

கள்ளச்சாராயம் ஒழிப்பு விடயத்தில் ஆளுநர் நேரடியாக தலையீடு செய்ய வேண்டும் என்று கோரி தமிழ்நாடு பா. ஜ. கவினர் ஆளுநர் ரவியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியை தமிழ்நாடு பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை, நயினார் நாகேந்திரன் மற்றும் அந்தக் கட்சியின் மகளிர் அணி நிர்வாகிகள் அடங்கிய குழுவினர் நேற்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது ஆளுநரிடம் மனு ஒன்றையும் அளித்தனர். அதில், தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் நேரடியாக தலையிட்டு மதுபானம் தொடர்பான பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வைக்கப் பட்டுள்ளன.

அத்துடன், செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்க முதலமைச்சருக்கு உத்தர விட வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கைகள் வைக்கப் பட்டுள்ளன.

(ஐ)

# அ. தி. மு. க. ஒன்றிணையாவிடின் தேர்தலில் ஒன்றுமில்லாததாகிவிடும்!

## பன்னீர்செல்வம் அணி

சேலம், மே 22

அ. தி. மு. க. ஒன்றிணைந்தால் வரும் பாராளுமன்றத் தேர்தலில் ‘ஹீரோ’, இல்லாவிட்டால் ‘ஸீரோ’”, என சேலத்தில் ஓ. பன்னீர்செல்வம் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், “இரட்டை இலை சின்னத்தையும், கொடியையும் பயன்படுத்தக் கூடாது என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறதா?. தற்காலிகமாக இரட்டை இலை சின்னம் பழனிசாமி அணிக்கு நீதிமன்ற தீர்ப்புக்கு உட்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு அடுத்த மாதம் வரவுள்ளது. அதுவரை கொடியையும், இரட்டை இலை சின்னம் பயன்படுத்துவதையும் யாராலும் தடுக்க முடியாது.

அ. தி. மு. க. ஒன்றுபட வேண்டும். அதுதான் எங்களின் எண்ணம். பழனிசாமி மீண்டும் ஆட்சிக்கு வரும் எண்ணம் இல்லை. தான் சம்பாதித்த பணத்தை காப்பாற்ற அ. தி. மு. கவை கேடயமாக பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்.

பழனிசாமியுடன் உள்ள மாவட்ட செயலாளர்கள் இடையே புரட்சி வெடிக்கப் போகிறது. நிச்சயமாக நாங்கள் ஒன்றிணைவோம். இபிஎஸ் எங்களுடன் வந்தால் அவரையும் சேர்த்து ஒன்றிணைவோம். எங்களுடன் அவர் ஒன்றிணையாவிட்டால், கட்சியை விட்டு நீக்கிவிட்டு அ. தி. மு. கவை வலுப்படுத்துவோம்.

சசிகலா மீண்டும் கட்சியில் இணைந்தால் பன்னீர்செல்வம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் இணைந்து மக்களின் நலன் கருதி பதவி குறித்து முடிவெடுப்பார்கள். அ. தி. மு. க. ஒன்றிணைந்தால் வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஹீரோ, இல்லாவிட்டால் “ஸீரோ’தான் வரும்” - என்றார்.

# முதல்வர் - கமல்ஹாசன் சந்திப்பு கூட்டணியில் மக்கள் நீதி மய்யம்?

சென்னை, மே 22

பாராளுமன்ற தேர்தல் கூட்டணியில் மக்கள் நீதி மய்யம் காங்கிரஸ் கட்சியின் கூட்டணியில் நெருங்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

கர்நாடக அமைச்சரவை பதவியேற்பில் கலந்து கொண்ட மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை தனியே சந்தித்து உரையாடியுள்ளார். காங்கிரஸ் கூட்டணியில் இல்லாவிட்டாலும் ஆதரவு நிலைப்பாட்டின் அடிப்படையில் தேர்தல் பிரசாரம் மற்றும் பதவியேற்பு விழாவில் கமல்ஹாசன் கலந்துகொண்டார்.

கர்நாடக தேர்தல் வெற்றிக்கு மட்டுமல்ல, வெற்றி பெற்ற முறைக்கும் பாராட்டுக்கள் என ராகுல் காந்திக்கு கமல்ஹாசன் வாழ்த்து தெரிவித்திருந்தார்.

காங்கிரஸுக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொள்வதன் மூலம் மக்கள் நீதி மய்யம் பாராளுமன்ற தேர்தலிலும் காங்கிரஸுடன் இணைந்து பயணிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என கடந்த 30.04.23 அன்று முரசொலி நாளிதழில் எழுதப்பட்டது.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் தி. மு. க. கூட்டணி கட்சியான காங்கிரஸுக்கு ஆதரவாக கமல்ஹாசன் பரப்புரை மேற்கொண்ட நிலையில், கர்நாடக தேர்தலிலும் காங்கிரஸுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார் கமல்ஹாசன்.

இதன் அடிப்படையில் மக்கள் நீதி மய்யம் மற்றும் அதன் தலைவர் கமல்ஹாசன் காங்கிரஸ் மற்றும் தி. மு. கவோடு நெருக்கம் காட்டி வருவதால் வருகிற பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இடம் பெறலாம் - என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# தெற்கில் ஏற்பட்ட விடியல் இந்தியா முழுவதும் பரவட்டும்!

## முதல்வர் ஸ்டாலின்

சென்னை, மே 22

‘தெற்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள விடியல், இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் பரவ வேண்டும்’ என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கர்நாடக முதல்வர் மற்றும் துணை முதல்வருக்கு வாழ்த்து தெரிவித்து, அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் சிவகுமார் ஆகியோருக்கு மனமார்ந்த பாராட்டுகள். மதச்சார்பின்மையை போற்றும் இவ்விருவரும், தங்கள் திறமையான ஆட்சி நிர்வாகத்தால், கர்நாடக மாநிலத்தை, புதிய உயரங்களுக்கு இட்டு செல்வர் என நம்புகிறேன்.

தெற்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள, இந்த விடியலானது, இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் பரவ வேண்டும். அத்தகைய மாற்றத்தை முன்னறிவிக்கும் மணி யோசை தான், பெங்களூரில் நடந்த பதவியேற்பு விழா - என்றுள்ளது.

(ஐ)

# தீர்ப்பை வலிதற்றதாக்கியோருக்கு சாவகச்சேரி நீதிமன்று அழைப்பாணை!

யாழ்ப்பாணம், மே 22
சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பை வலிதற்றதாக்கும் விதத்திலும் அதற்கு முரணான வகையில் நடந்து கொள்வதாக தெரிவித்து சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ. மயூரன், சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் திலகராணி ஆகியோரை இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் முன்னிலை முன்னிலையாகுமாறு நீதிமன்றத்தால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள், கடந்த 12ஆம் திகதி தனியாரால் அபகரிக்கப்பட்ட தாவளை - இயற்றாலை ஊரெல்லை வீதியை மீட்டுத் தருமாறு கோரி சாவகச்சேரி பிரதேச சபைக்கு முன்பாக கிராம மக்களோடு இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம் பொலிஸாரோடு இணைந்து பிரதேச சபையில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தனியாரால் அபகரிக்கப்பட்டிருந்த குறித்த வீதியை அளவீடு செய்து எல்லை வேலிகளை அகற்றி பொதுமக்கள் பாவனைக்காக திறந்து விட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே தனியாரால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகளை நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த, 18.01.2021ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை வலிதற்றதாக்கும் விதத்திலும் அதற்கு முரணான வகையிலும் செயல்பட்டனர் என்று தெரிவித்து அது தொடர்பாக ஆராய்வதற்காக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 500 கிலோ எடைகொண்ட வெடிக்காத குண்டு மீட்பு

கிளிநொச்சி, மே 22

**போர் காலத்தில் விமானம் மூலம் வீசப்பட்ட 500 கிலோ எடைகொண்ட அதிசக்தி வாய்ந்த குண்டு வெடிக்காத நிலையில் ஒன்று கிளிநொச்சியில் கண்டறியப்பட்டுள்ளது.**



தர்மபுரம் காட்டு பகுதியிலேயே இந்தக் குண்டு கண்டறியப்பட்டுள்ளது.

3 அடி நீளமும், 3 அடி சுற்றுவட்டமும் கொண்ட இந்த குண்டு 15 ஆண்டுகளுக்கு முன்னர் கிபீர் விமானம் மூலம் வீசப்பட்ட இந்த குண்டு வீசப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இந்தக் குண்டை பாதுகாப்பான முறையில் செயலிழக்க வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# நீதியரசராக இருந்த விக்னேஸ்வரனுக்கு இன்னமும் அரசமைப்பு தெரியவில்லை!

## முன்னாள் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், மே 22
நீதியரசராக இருந்து ஓய்வுபெற்ற முன்னாள் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனுக்கு இன்னமும் அரசமைப்பு தெரியவில்லை. ஜனாதிபதியிடம் அவர் முன்மொழிந்த இடைக்கால நிர்வாகசபை யோசனையிலிருந்தே அது வெளிப்படையாகத் தெரிகின்றது இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சுகளின்போது பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரனால் ஓர் ஆவணம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகங்களை நடத்துவதற்கு இடைக்கால நிர்வாகசபை அமைக்கும் யோசனை அதில் முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தவராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசமைப்பின் 154 'எல்' பிரிவில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாண சபை நிர்வாகத்தை அரசமைப்புக்கு இயைவாக நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கருதினால் மாத்திரமே அவ்வாறானதோர் இடைக்கால நிர்வாக சபைக்கான அனுமதியை பாராளுமன்றில் பெற்று நடைமுறைப்படுத்தலாம்.

போர் காலங்களில் கூட அவ்வாறானதோர் ஏற்பாடு நடைமுறையிலிருக்கவில்லை. இப்போது மாகாண நிர்வாகம் அரசமைப்புக்கு ஒத்திசைவாக நடக்கின்றது. அப்படியிருக்கையில் இடைக்கால நிர்வாக சபையை எப்படி அமைக்கலாம்?

நீதியரசராக இருந்தவர் விக்னேஸ்வரன். அவருக்கு சட்டம் தெரியும் என்றுதான் முதலமைச்சராக்கினார்கள். ஆனால், முதலமைச்சராகிய சில மாதங்களிலேயே அப்போதைய பிரதம செயலர் திருமதி விஜயலட்சுமி ரமேஸால் முதலமைச்சரின் சுற்றறிக்கைக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. பின்னர் அந்தச் சுற்றறிக்கையை மீளப்பெற்றார் விக்னேஸ்வரன். அரசமைப்புத் தெரியாமல் முதலமைச்சராகப் பணியாற்றினார். அந்தப் பதவியிலிருந்து விலகிய பின்னரும் அரசமைப்புத் தெரியாமல் இருக்கின்றார். முதலில் அரசமைப்பைப் படித்து தெளிவுபெற்ற பின்னர் அவர் செயல்பட்டால் நல்லது - என்றார். (ஐ)

# 65 கிலோ கஞ்சா பொதிகள் காரைநகரில் மீட்கப்பட்டன



யாழ்ப்பாணம், மே 22
காரைநகரில் பற்றைக் காட்டுக்குள்ளிருந்து 65 கிலோ எடைகொண்ட கஞ்சா பொதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டன.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த கஞ்சா பொதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அந்த இரு மூடைகளிலும் 26 பொதிகள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த கஞ்சா பொதிகள் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவனை தாக்கி காணொலி; இரு மாணவர்கள் கைதாகினர்!

வவுனியா, மே 22
வவுனியாவில் பிரபல பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலர் இணைந்து, சக மாணவனை வீதியில் வைத்து தாக்கி அதனை காணொலியாக பதிந்து ரிக்ரொக்கில் பதிவிட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வைரவப்புளியங்குளம் வீதியில் வைத்து நேற்று முன்தினம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாணவன் வழிமறிக்கப்பட்டு, தலைக்கவசம், தடிகளால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

அந்தத் தாக்குதல் காணொலியாக பதிவு செய்யப்பட்டு அன்றைய தினமே ரிக்ரொக்கிலும் பதிவிடப்பட்டது,

தாக்குதலுக்குள்ளான மாணவன் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதை தொடர்ந்து, 2 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதலுடன் தொடர்புடைய ஏனைய மாணவர்கள் தலைமறைவாகி விட்டனர். அவர்களை தேடும் பணிகள் நடந்து வருகிறது.

# சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாட கருத்தரங்கு ஆரம்பம்!

## இன்று யாழ். நகரில் நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 22
தமிழ் மக்கள் கூட்டணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கல்வி கருத்தரங்கு ஆரம்பமானது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சித்தங்கேணி சந்தியிலுள்ள மகா கணபதி மண்டபத்தில் கருத்தரங்கு ஆரம்பமானது.

இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கணித ஆசிரியர் அமரர் செல்லையா தவராசா ஞாபகார்த்தமாக தமிழ் மக்கள் கூட்டணியின் கல்வி மேம்பாட்டு பிரிவு குறித்த இலவச கல்வி கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.

கருத்தரங்கில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு கொழும்பு பிரபல பாடசாலைகளின் வினாத்தாளுடன் கூடிய கையேடுகள் மற்றும் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கு தேவையான எழுதுகருவி பொருட்கள் என்பன வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன், சட்டத்தரணி வி. மணிவண்ணன், கட்சியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவு பொறுப்பாளர் வ. பார்த்தீபன், கணித ஆசிரியர் அமரர் செல்லையா தவராசாவின் குடும்பத்தினர், அநுசரணையாளர்கள், வளவாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கொண்டதாக அமைந்த இக்கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள டி. சி. எம். கல்வி நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (ஐ)

# டெங்கு கட்டுப்பாட்டு பணியில் இராணுவத்தினரும் ஈடுபடுவர்!

கொழும்பு, மே 22

**டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டெங்கு வளாக பரிசோதனை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக டெங்கு கட்டுப்பாட்டு செயலணிக்கு இராணுவம் தமது ஆதரவை வழங்கி வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை, அறநெறி பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களைச் சூழவுள்ள பகுதிகளில் சோதனை செய்தல் உள்ளிட்ட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பமானதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள அறநெறி பாடசாலைகளை மையமாக கொண்டு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடிதுவக்கு தெரிவித்தார்.

இதேவேளை, சோதனைகளை மேற்கொள்வதற்கு கடினமாக உள்ள பிரதேசங்களை ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி சோதனையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு கூறியுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களுக்கு இணையாக வடமேல் மாகாணத்திலும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

57 சுகாதார மற்றும் வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு அபாய நிலை பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது. இந்த பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரையில் 35, 423டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 7978 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 7411 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 2121 பேரும் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ள தாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# கடவுசீட்டுக்கு பணம் பறித்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்

கொழும்பு, மே 22

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தவர்களிடம் தரகர்கள் போல் காட்டி பணம் பறித்த மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

குடிவரவு திணைக்களத்துக்கு அருகில் இடம்பெற்று வரும் நிதி மோசடிகள் தொடர்பாக அண்மையில் விடயங்கள் வெளியாகின.

வரிசையில் காத்திருக்காமல் நிர்ணயிக்கப்பட்ட முறைக்கு புறம்பாக கடவுச்சீட்டை பெற்றுத்தருவதாக சந்தேகநபர்கள் தலா 25,000 ரூபாய் வசூலித்தமை தெரியவந்தது.

# ஐஸ் போதைப் பொருளுடன் அரச வாகன சாரதி கைது!

கொழும்பு, மே 22

365 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் அரச வாகன சாரதி ஒருவர் களுத்துறையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 45 இலட்சம் ரூபாய் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையில் சாரதியாக பணியாற்றிவருபவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ரணிலின் தலைமையே நாட்டை முன்னேற்றும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, மே 22

“நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து ஜனாதிபதியே மீட்டெடுத்தார். எனவே, அவர் தலைமையின் கீழ் இந்நாடு முன்னேறும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. எனவே, ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.” என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கேகாலையில் அசுபினி எல்ல நீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ”இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய நெதர்லாந்து, துருக்கி ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு நன்றிகூற கடமைபட்டுள்ளோம். அதேபோல குறித்த வேலைத்திட்டத்தில் பங்கேற்ற நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஐ. நாவின் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் 6ஆம் பிரிவில், அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கு நாம் தீவிரமாக செயற்படுவோம்.

இந்த வேலைத்திட்டத்தை முதலில் ஆரம்பித்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம், எதிரணியில் இருந்தாலும் இந்நிகழ்வில் பங்கேற்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு மத்தியிலும் இப்படியான வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான சூழ்நிலையை எமது ஜனாதிபதியே ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்பதையும் நினைவுகூற வேண்டும்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து ஜனாதிபதியே மீட்டெடுத்தார். கைவிடப்பட்டிருந்த அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு ஏதுவான நிலைக்கு அவர் நாட்டை கொண்டு வந்துள்ளார். எமது நாட்டை அவர் சிறந்த நிலைக்கு கொண்டுவருவார் என்ற நம்பிக்கை உள்ளது.” - என்றார்.

# மலையக மக்கள் பிரச்னை குறித்து கண்டி ஆயர் - ஜனாதிபதி பேச்சு!

கொழும்பு, மே 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கண்டியில் உள்ள ஆயர் இல்லத்துக்கு சென்று கண்டி மறைமாவட்ட ஆயர் கலாநிதி வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையை சந்தித்தார்.



பெருந்தோட்ட மக்கள் வீட்டுப் பிரச்னை மற்றும் பிற பிரச்னைகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்னும் அவர்களின் நல்ல வாழ்க்கைத் தரத்துக்கு உத்தரவாதம் வழங்கப்படாமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன், அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மத்திய மாகாணத்தில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்து இதன்போது ஆயர் ஜனாதிபதிக்கு விளக்கமளித்ததுடன் ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவால் இச்சந்தர்ப்பத்தில் ஆயர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரையும் ஒருங்கிணைத்து சில பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

அத்துடன், நுவரெலியா மற்றும் ஏனைய பெருந்தோட்டங்களின் வீதிக் கட்டமைப்பு சேதம் அடைந்துள்ளதால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்த ஆயர், வீதிக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்துதருமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார்.

ஆயர் பிரிவின் அருட்தந்தையர், மற்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, சனத் நிஷாந்த, மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித்.யூ. கமகே, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட பலர் இந்த சந்திப்பில்கலந்துகொண்டனர். (ஐ)

# அதிவேக நெடுஞ்சாலையில் வேகத்தை குறைக்க அறிவுரை

கொழும்பு, மே 22

மோசமான காலநிலை காரணமாக அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களை ஓட்டும்போது மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் வாகனங்களை வைத்திருக்குமாறு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பிரிவு சாரதிகளுக்கு அறிவித்துள்ளது.

இதேபோல், வாகனங்களுக்கு இடையே ஓர் இடைவெளியை வைத்து, இருட்டாக இருப்பதால், முன் மற்றும் பின் விளக்குகளை எரிய வைத்து தனது வாகனத்தை செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் வழக்கு; கண்காணிக்க சட்டத்தரணிகள் குழு!

கொழும்பு, மே 22

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான சிங்கப்பூர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் நீதிமன்ற நடவடிக்கைளை கண்காணிக்கவும் தனியான சட்டத்தரணிகள் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சட்ட மா அதிபர் திணைக்களத்தின் குழுவினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் புதிய குழு நியமிக்கப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அசேல ரெகவ தெரிவித்துள்ளார்.

அதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடமிருந்து இந்த வாரத்துக்குள் அனுமதி பெறப்படவுள்ளது.

இதேவேளை, எக்ஸ் பிரஸ் பேர்ள்கப்பலால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு கோரி சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை சர்வதேச வணிக நீதிமன்றத்தில் கொண்டுவருவது தொடர்பிலான அரசாங்கத்தின் தீர்மானம் எதிர்வரும் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என சட்ட மா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது.

இந்த வழக்கை கையாளும் சட்ட நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இந்த வழக்கு சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் எதிர்வரும் முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஐ)

# இந்தியாவின் கண் மருந்து கறுப்பு பட்டியலில் சேரும்!

சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 22

**இலங்கையில் கண் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் பயன்படுத்தப்படும் 'பிரெட்னிசொலோன்' என்ற கண் சொட்டு மருந்தை கறுப்பு பட்டியலில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

முன்னதாக, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரெட்னிசொலோன் கண் சொட்டு மருந்து தொடர்பில் பல சிக்கல்கள் பதிவாகின. இதையடுத்து, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதனை பயன்படுத்துவதை நிறுத்துமாறு அனைத்து மருத்துவமனைகளுக்கும் சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்திருந்தது.

இந்தநிலையில் இலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வக சோதனைகள், இந்த கண் சொட்டு மருந்து மாசுபட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே, அந்த மருந்துக்கான கொள்வனவு கட்டணத்தை செலுத்த வேண்டாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரெட்னிசொலோனுக்கு பதிலாக மியன்மாரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்தை பயன்படுத்தி தற்போது கண் சத்திரசிகிச்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# அணுக முடியாத இடங்களில் நுளம்பு ஒழிப்புக்கு புதிய திட்டம்!

கொழும்பு, மே 22

அணுக முடியாத இடங்களில், நுளம்புகளை அழிப்பதற்கு 'மொஸ்கிட்டோ டன்க்' என்ற இரசாயனத்தை பயன்படுத்தும் முறைமை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அணுக முடியாத இடங்களில், நுளம்புகளை அழிப்பதற்காக ட்ரோன் கருவிகளைப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், 'மொஸ்கிட்டோ டன்க்' என்ற இரசாயனத்தை பயன்படுத்தும் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார மருத்துவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 35 ஆயிரத்து 283 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் சுமார் 400 டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர்.

நாடாளாவிய ரீதியில் உள்ள 370 பொது சுகாதார சேவைப் பிரிவுகளில், 39 சுகாதார சேவை பிரிவுகள் அதிக அவதானம் மிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

எனவே, டெங்கு நோயை கட்டுப்படுத்த தங்களது சுற்றுப்புற பகுதிகளை தூய்மையாக வைத்திருக்குமாறு சுகாதாரத்துறை அதிகாரிகள் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# பொலிஸார் துப்பாக்கி சூடு இளைஞர் ஒருவர் படுகாயம்!

கண்டி, மே 22

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். அத்துடன், நாய் ஒன்று கொல்லப்பட்டதாக தெரிய வருகின்றது.

கண்டி - கம்பளை - பன்வில தென்ன பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் வீடு ஒன்றில் மதுபான வியாபாரம் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போதே குறித்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அங்கிருந்த இளைஞர் ஒருவர் காயமடைந்தார். வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த நாய் இந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஷாப்டரின் கல்லறைக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிப்பு

கொழும்பு, மே 22

நீதிமன்ற உத்தரவையடுத்து, தினேஷ் ஷாப்டரின் உடல் மே 25ஆம் திகதி தோண்டி எடுக்கப்படவுள்ளது. இந்நிலையில், அவரின் கல்லறைக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பை சேர்ந்த பிரபல தமிழ் வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் காரில் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார். தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் அன்றிரவே உயிரிழந்தார்.

இவரின் மர்ம மரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை, சுமார் 100இற்கும் மேற்பட்டவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்!

கொழும்பு, மே 22

தேசிய பாடசாலைகளின் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, விண்ணப்பதாரர்கள் அந்தந்த பாடசாலைகளுக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# நைஜீரியாவுக்கான தூதுவராக கணநாதன் பொறுப்பேற்றார்!



கொழும்பு, மே 22

நைஜீரிய சமஷ்டி குடியரசுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள வேலுப்பிள்ளை கணநாதன் தனது நற்சான்று கடிதத்தை தலைநகர் அபுஜாவில் உள்ள இராஜாங்க இல்லத்தில் நைஜீரிய ஜனாதிபதி முஹமது புஹாரியிடம் வழங்கினார்.

இந்த உத்தியோகபூர்வ வைபவத்தையடுத்து இடம்பெற்ற தனிப்பட்ட சந்திப்பின்போது நைஜீரிய ஜனாதிபதியும் உயர்ஸ்தானிகரும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது, அண்மையில் பிரித்தானியாவில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது கூட்டத்தை நினைவு கூர்ந்த ஜனாதிபதி புஹாரி, தனது நட்பு ரீதியான வாழ்த்துக்களை இலங்கை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

# வரி ஏய்ப்பில் போதகர் ஜெரோம்? விசாரணைகள் ஆரம்பமாகின!

கொழும்பு, மே 22

போதகர் ஜெரோம் பெர்ணாண்டோவின் குளோரியஸ் தேவாலயம் வருமான வரி சர்ச்சையில் சிக்கியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

போதகர் ஜெரோம் அரசாங்கத்துக்கு வரிகளை செலுத்தினாரா என்பதை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் உள்நாட்டு இறைவரி திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் இதனை உறுதி செய்துள்ளதுடன் தனிப்பட்ட அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் தங்களிடம் இல்லை என தெரிவித்துள்ளனர்.

இது குறித்து குளோரியஸ் தேவாலய அதிகாரியொருவரிடம் கேள்வி எழுப்பியவேளை அவர் பதில் தருவதாக தெரிவித்தபோதிலும் பின்னர் தொடர்பு கொள்ளவில்லை என்று சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஜெரோம் பெர்ணாண்டோவின் தேவாலய நிர்வாகத்துக்கு எந்த வரிச்சலுகைகளையும் வழங்கவில்லை என உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பௌத்த ஆலயங்கள் அரசாங்கத்தில் மதவழிபாட்டுத் தலங்கள் என பதிவு செய்யப்பட்டால் வரிவிலக்கு அளிக்கப்படுவது வழமை. (ஐ)

# மாணவியை கடத்த முயற்சி; சந்தேகநபர்களுக்கு வலை!

கொழும்பு, மே 22

பதுளை - பண்டாரவளை நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் 6ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 11 வயது மாணவியை வானில் கடத்த நடந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி பாடசாலை முடிந்து வீடு செல்வதற்காக பேருந்து தரிப்பிடத்துக்கு மாணவி தனியாக நடந்து சென்றுள்ளார். அப்போது தொலைவில் வெள்ளை நிற வான் ஒன்று நின்று கொண்டிருந்தது.

கறுப்புத் துணியால் முகத்தை மூடியிருந்த இளைஞர் ஒருவர், வானில் இருந்து இறங்கி மாணவியின் அருகில் வந்து, 'உனது தாயார் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சொக்லேட்டை உனது தாயார் உன்னிடம் கொடுத்து தன்னுடன் வானில் வரச் சொன்னதாகவும்' அந்த மாணவியிடம் கூறியுள்ளார்.

இந்நிலையில், அச்சமடைந்த மாணவி பண்டாரவளை நகரில் உள்ள கடை ஒன்றுக்குள் ஓடிச் சென்று தனக்கேற்பட்ட நிலைமையை கூறியுள்ளார். அதனையடுத்து இது தொடர்பில் தாயாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், மாணவி தனது தாயுடன் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸார் விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

# இந்தியாவின் பெற்றோலிய பொருட்கள் ஏற்றுமதியால் கோபத்தில் ஐரோப்பிய ஒன்றியம்

## என்ன விளைவுகள் ஏற்படும்?



இந்தியா ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்கி, அதன் சுத்தீகரிக்கப்பட்ட பொருட்களை சந்தையில் விற்பனை செய்வதால், ஐரோப்பிய யூனியன் இந்தியா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுக் கொள்கை தலைவர் ஜோசப் பொரெல் கூறியுள்ளார்.

இதில் டீசலும் அடங்கும். பினான்ஷியல் டைம்ஸுக்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - யுக்ரேன் போர் தொடங்கியதில் இருந்து, கடந்த ஓராண்டில் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா அதிக அளவில் எண்ணெயை வாங்கியுள்ளது.

மலிவான கச்சா எண்ணெய் கிடைப்பதன் காரணமாக இந்தியாவில் அமைந்துள்ள சுத்தீகரிப்பு நிலையங்கள் நிறையவே பயனடைந்துள்ளன. ஐரோப்பாவிற்கு சுத்தீகரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் இந்த நிறுவனங்கள் அதிக பணம் சம்பாதிக்கின்றன.

### ஜோசப் பொரெல் என்ன சொன்னார்

இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு வரும் டீசல் அல்லது பெட்ரோல், ரஷ்ய எண்ணெயில் இருந்து தயாரிக்கப்படுகிறது என்றால், அது உறுப்பு நாடுகளுக்கு கவலையளிக்கும் விஷயம் என்றும், அவர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொரெல் கூறினார்.

"ரஷ்யாவிடம் இருந்து இந்தியா எண்ணெய் வாங்குவது இயல்புதான். ஆனால் அது ரஷ்ய எண்ணெயை சுத்திகரிக்கும் மையமாக மாறி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை எங்களுக்கு விற்றுக்கொண்டே இருந்தால், நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்," என்று அவர் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான உரையாடலில் யுக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல், உணவுப் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து தான் பேசியதாக பொரெல் கூறினார். ஆனால் அவர் ரஷ்ய எண்ணெய் பற்றிக் குறிப்பிடவில்லை.

"இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவுடன் பேசும். ஆனால் இது கையை நீட்டுவது போல் இருக்கும், விரலைச் சுட்டிக்காட்டுவது போல இருக்காது" என்று ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவர் மார்கரெட் வெஸ்டேகர் கூறியதாக ராய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரிவிக்கிறது.

### இந்தியா எவ்வளவு எண்ணெய் இறக்குமதி செய்கிறது

போக்குவரத்துச் செலவு மிக அதிகமாக இருந்ததால், இதற்கு முன் இந்திய சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்யாவிடம் இருந்து குறைவான அளவே எண்ணெய் வாங்கி வந்தன. ஆனால் 2022-23 நிதியாண்டில் ஒரு நாளைக்கு 970,000-981,000 பீப்பாய்கள் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. இது நாட்டின் மொத்த இறக்குமதியில் ஐந்தில் ஒரு பங்கு.

ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளரான ரோஸ் நேப்ட் மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய சுத்திகரிப்பு நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனும், இந்தியாவிற்கு வழங்கப்படும் எண்ணெயின் தரத்தை கணிசமாக அதிகரிக்கவும் பன்முகப்படுத்தவும் ஒரு டெர்ம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் நாயரா எனர்ஜி ஆகிய நிறுவனங்கள், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளின் முக்கிய ஏற்றுமதியாளர்கள் மற்றும் ரஷ்ய எண்ணெயை வாங்குபவர்கள் என்று கெப்லரின் கப்பல் கண்காணிப்பு தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த நிறுவனங்களிடமிருந்து இது குறித்து உடனடி பதில் கிடைக்கவில்லை என்று ராய்ட்டர்ஸ் கூறுகிறது.

ரஷ்யா யுக்ரேன் மீது படையெடுப்பதற்கு முன்பு இந்தியா ஒரு நாளைக்கு சராசரியாக 1,54,000 பீப்பாய்கள் (பிபிடி) டீசல் மற்றும் ஜெட் எரிபொருளை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்தது என்று கெப்லர் கூறுகிறது.

இந்த ஆண்டு பிப்ரவரி 5 முதல் ரஷ்ய எண்ணெய் பொருட்களின் இறக்குமதியை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்த பின்னர் இது 2,00,000 பீப்பாய்களாக அதிகரித்துள்ளது.



ரஷ்ய எண்ணெய் வரத்தைத் தடுப்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் தேசிய அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும் என்று பொரெல் கூறினார். ஐரோப்பிய ஒன்றியம், வாங்குபவர்களை குறிவைக்கக்கூடும் என்று அவர் கோடிக்காட்டினார்.

அவர்கள் விற்கிறார்கள் என்றால் யாரோ வாங்குகிறார்கள் என்று அர்த்தம், யார் வாங்குகிறார்கள் என்று பார்க்க வேண்டும் என்றார் அவர்.



### இந்திய அரசு கூறியது என்ன

"ஐரோப்பிய யூனியனின் தடை விதிகளின்படி ஒரு மூன்றாவது நாட்டில் கச்சா எண்ணெயின் வடிவம் மாற்றப்பட்டால் அதை ரஷ்ய பொருட்கள் என்று அழைக்க முடியாது" என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

"ஐரோப்பிய யூனியன் கவுன்சிலின் விதிமுறைகளைப் பாருங்கள். ரஷ்ய கச்சா எண்ணெய் மூன்றாவது நாட்டில் கணிசமான அளவிற்கு உருமாற்றம் செய்யப்பட்டால் அது ரஷ்யாவுடையது என்று கருதப்படாது. கவுன்சிலின் ஒழுங்குமுறை விதி 833-2014 ஐப் பார்க்குமாறு நான் உங்களை வலியுறுத்துகிறேன்," என்று அவர் கூறினார்.

வங்கதேசம், சுவீடன் மற்றும் பெல்ஜியம் ஆகிய மூன்று நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜெய்சங்கர், தனது சுற்றுப்பயணத்தின் கடைசி கட்டமாக திங்களன்று பிரஸ்ஸல்ஸ் (பெல்ஜியம் தலைநகர்) சென்றடைந்தார்.

இதற்கு முன்னதாகவும் ஜெய்சங்கர் ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியை ஆதரித்தார். யுக்ரேன் மீதான ராணுவ நடவடிக்கையை அடுத்து ரஷ்யாவுடனான வர்த்தகத்தை குறைக்குமாறு புது டெல்லிக்கு அழுத்தம் கொடுத்ததற்காக அவர் மறைமுகமாக மேற்கத்திய நாடுகளை விமர்சித்தார்.

"ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது ரஷ்யாவுடனான எங்கள் வர்த்தகம் மிகவும் சிறியது. அது வெறும் 12-13 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே. நாங்களும் ரஷ்யாவுக்கு சில பொருட்களை கொடுத்துள்ளோம். மக்கள் இதை வேறு வழியில் பார்க்கக்கூடாது என்று நான் கருதுகிறேன்," என்று அவர் கூறியிருந்தார்.

இந்தியாவில் இருந்து பெட்ரோ தயாரிப்புகளை வாங்குவதில் ஐரோப்பிய ஒன்றியம் முதலிடத்தில் உள்ளது.

2022 ஏப்ரல் முதல் 2023 ஜனவரிக்கு இடையில் இந்தியாவில் இருந்து ஐரோப்பாவிற்கான சுத்தீகரிக்கப்பட்ட பெட்ரோலியம் ஏற்றுமதி 11.6 மில்லியன் டன்களை எட்டியது.

இந்தியாவில் இருந்து சுத்தீகரிக்கப்பட்ட பெட்ரோல் பொருட்களை இறக்குமதி செய்யும் 20 பிராந்தியங்களின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் முதலிடத்தை எட்டியது.

ஐரோப்பிய சந்தைக்கு இந்தியாவின் சுத்தீகரிக்கப்பட்ட பெட்ரோல் பொருட்களின் ஏற்றுமதி விகிதம் 22 சதவிகிதத்தை எட்டியுள்ளது.

இங்குள்ள தனியார் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்யாவிலிருந்தான அதிகரித்த எண்ணெய் விநியோகத்தை பயன்படுத்திக் கொள்கின்றன. மேலும் அவர்கள் ஐரோப்பாவை தங்கள் சிறந்த சந்தையாகப் பார்க்கிறார்கள்.

### இந்தியாவுக்கு எவ்வளவு கவலை

ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியா செயல் உத்தி உறவுகளைக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இத்தகைய அறிக்கை கண்டிக்கத்தக்கது என்று எண்ணெய் நிபுணர் நரேந்திர தனேஜா கருதுகிறார்.

"நாட்டு மக்களை மகிழ்விப்பதற்கான அரசியல் அறிக்கையாக இது இருந்தால் பரவாயில்லை. ஆனால், எப்படியாவது பொருளாதாரத் தடைகளை விதிப்போம் என்று நினைத்தால், சீனா, துருக்கி உட்பட குறைந்தது 15 நாடுகள் மீது தடைவிதிக்க வேண்டியிருக்கும். மேலும் இது நடந்தால் இந்த நாடுகளால் பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு எண்ணெய் விலையில் ஏற்றம் ஏற்படும்," என்று அவர் குறிப்பிட்டார்.

எண்ணெய் விலை ஏற்றம், ஏற்கனவே சிக்கலில் இருக்கும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பொருளாதாரங்களுக்கு ஆபத்தானதாக இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

'ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவும், சீனாவும் எண்ணெய் வாங்குவதால் உலக சந்தையில் எண்ணெய் தட்டுப்பாடு இல்லை. இந்த அமைப்பில் தலையிட்டால் கொந்தளிப்பு ஏற்படும்" என்றார் அவர்.

"ஐரோப்பாவில் மாசுவைக் காரணம் காட்டி பல சுத்திகரிப்பு நிலையங்கள் மூடப்பட்டன. ஆனால் அவற்றின் தேவை உள்ளது. இப்போது நீங்கள் வெவ்வேறு நாடுகளில் இருந்து எண்ணெய் பொருட்கள் அல்லது டர்பைன் எரிபொருளை வாங்குகிறீர்கள். அவற்றின் மூலக்கூறுகள் ரஷ்யாவில் இருந்து வந்தவை, துருக்கி, அல்லது ஈராக்கிலிருந்து வந்தவை என்பதை எப்படி கண்டுபிடிப்பீர்கள்," என்று தனேஜா வினவினார்.

"இதுபோன்ற அறிக்கை, இந்த நாடுகளுடனான இந்தியாவின் உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகள் குறைவு. இந்தியா எந்த ஒரு சூழ்நிலையிலும் பயப்பட வேண்டியதில்லை," என்று தனேஜா குறிப்பிட்டார்.

# மதில் மேல் இருக்கும் ஆமைகள்?

நிலாந்தன்

மற்றொரு மே 18ம் கடந்து போய்விட்டது. இது பதினாலாவது மே 18. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் அரசியல் எதுவரை முன்னேறியிருக்கிறது? அல்லது எங்கே தேங்கி நிற்கிறது?

மே 18ஐத் தமிழ்த்தரப்பு எவ்வாறு அனுஷ்டிக்கிறது என்பதிலிருந்தே ஒரு மதிப்பீட்டுக்கு வரலாம். அது ஒரு தேசிய துக்க தினம் என்று தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் சில பகுதிகளைத் தவிர ஏனைய தமிழ்ப் பகுதிகளில் வாழ்க்கை வழமைபோல இயங்கியது. பாடசாலைகள் இயங்கின. அலுவலகங்கள் இயங்கின. பாடசாலைகளில் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. வெளிக்களப்பயிற்சி நிலையப் பரீட்சைகள் நடந்தன.

ஒரு தொகுதி மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி போய்க்கொண்டிருக்க, ஏனையவர்கள் தமது அன்றாடத் தொழில்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஆங்காங்கே கஞ்சி காய்ச்சி கொடுக்கப்பட்டது. கஞ்சி காய்ச்சும் நிலையங்களைக் கடந்து போனவர்கள் ஆங்காங்கே கஞ்சியை வாங்கி குடித்தார்கள். பின்னர் வீட்டுக்குச் சென்று வழமையான மதிய உணவை அருந்தினார்கள். அதாவது சித்திரைக் கஞ்சியை குடிப்பதுபோல விரதமிருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு விரத உணவாக அருந்தியவர்கள் எத்தனை பேர்?

மே 18க்கு முதல் நாள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அந்த நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கடைகளை மூடுமாறும் பாடசாலைகளை மூடுமாறும் அழைப்பு விடுத்தது. ஒரு தேசிய துக்க தினத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று அதற்கு முதல் நாட்தான் ஒரு கட்சி மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது என்றால் நிலைமை எப்படியிருக்கிறது?

ஒரு தேசிய துக்க தினத்தன்று, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் துக்கத்தை அனுஷ்டிக்க, பெரும்பகுதியினர் தமது வழமையான அன்றாடச் சோலிகளுக்குள் மூழ்கிக் கிடந்தார்கள். அப்படியென்றால் அதை ஒரு தேசிய துக்க தினம் என்று அழைக்கலாமா?

கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் மொத்தம் 2000க்கும் குறையாதவர்கள் கூடினார்கள் என்று ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். பல்கலைக்கழக மாணவர்களும் அப்படித்தான் கூறுகிறார்கள். பொதுக் கட்டமைப்பினர் கிட்டத்தட்ட 4,000பேர் வரை கூடினதாக கூறுகிறார்கள். தாங்கள் மொத்தம் 1500 தீப்பந்தங்களை நட்டு வைத்ததாகவும், ஆனால் அதைவிட அதிகமான தொகையினர் அங்கு கூடியிருந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி வருவதற்கு பொதுவான ஏற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. நடைமுறையில் உள்ள பொதுக் கட்டமைப்பானது நினைவு கூர்தலுக்கான பொது இடத்தை நிர்வகிப்பதற்கும் அப்பால் மக்களைத் திரட்டும் வேலைகளை செய்யவில்லை. அக்கட்டமைப்பில் சில கத்தோலிக்க மதகுருக்களும் செயற்பாட்டாளர்களும் உண்டு. ஓர் அங்லிகன் மதகுரு கட்டமைப்பை வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும், பரந்துபட்டதாகவும் மாற்ற வேண்டும் என்று முயற்சித்திருக்கிறார். திருகோணமலையைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். பல்கலைக்கழக மாணவர் அமைப்பினரும் கேட்டிருக்கிறார்கள். அதுதொடர்பாக கலந்துரையாடுவதற்கு மெய்நிகர் சந்திப்பு ஒன்றை ஒழுங்குபடுத்துவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த விவகாரத்தை நான் மே 18க்கு முன்னரே எழுத யோசித்தேன். ஆனால் இருக்கின்ற அமைப்பைக் குழப்பக்கூடாது என்பதோடு, துக்கத்தை அனுஷ்டிக்கப்போகும் மக்கள் மனதில் சலிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் அவ்வாறு எழுதுவதைத் தவிர்த்தேன். பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க மதகுருவோடும் நான் உரையாடினேன். அவர் அதனை ஜனநாயகமயப்படுத்த வேண்டிய தேவையை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார். பரந்துபட்ட அளவில் அதை விஸ்தரிக்கும் பொழுது அதற்குள் யார் யார் வருவார்கள் என்ற பயம் உண்டு என்று சொன்னார். எனினும், இப்போதுள்ள பொதுக் கட்டமைப்பு வெளிப்படைத் தன்மையற்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பை மட்டுமல்ல நினைவு கூர்தலுக்காக ஏற்கனவே உள்ள பொதுக் கட்டமைப்புகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அக்கட்டமைப்புகளின் பின்னணி குறித்தும், அதை யார் பின்னிருந்து இயக்குகிறார்கள் என்பதை குறித்தும் அக்கட்சிக்கு சந்தேகம் இருப்பதாக தெரிகிறது.

தமிழரசியலில் சூழ்ச்சிக் கோட்பாடுகளை அதிகம் புனையும் ஒரு கட்சி அது. ஆனாலும், தமிழ் அரசியலில் இப்பொழுது யார் யாரோடு நிற்கிறார்கள்? யாருக்கு



யார் காசு கொடுக்கிறார்கள்? யாரை யார் ரிமோட் பண்ணுகிறார்கள்? என்று சந்தேகப்படும் அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை அதிகரித்து வருகிகிறது என்பது உண்மைதான்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி றொட்ரிகோ மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை, மாவட்ட மக்கள் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அந்நிகழ்வுக்கு ஆட்களைத் திரட்டியது படைப் புலனாய்வுத் துறைக்கு நெருக்கமானவர்கள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதுபோல வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவுநிகழ்வை வன்னித்தமிழர் ஒன்றியம் என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அதற்கு வவுனியா விகாராதிபதி நிதியுதவி செய்திருக்கிறார். அதாவது தமிழ் அரசியல் பரப்பில் ஒரு மையம் இல்லாத காரணத்தால் ஒரு பலமான திரட்சி இல்லாத காரணத்தால், யார் எதைச் செய்கிறார்கள்? யாரை யார் இயக்குகிறார்கள்? என்பவற்றைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை உருவாகி வருகிறதா?

தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உடைக்க வேண்டும் குழப்ப வேண்டும் என்று திட்டமிட்டு பல்வேறு வகைப்பட்ட தரப்புக்களும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவதாகத் தெரிகிறது.

“
**தமிழ்மக்களை வெளித்தரப்புகள் பிரிக்கப் பார்க்கின்றன, வெளித்தரப்புகள் ஆமைகளையும் பொம்மைகளையும் சம்பளம் கொடுத்து இயக்குகின்றன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பதிலாக தேசத்திரட்சியை உறுதிப்படுத்த வேண்டும். பலப்படுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறிய அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு விகிதளவுக்கு எதிரிக்கு சேவகம் செய்திருக்கின்றன.**

ஓர் ஆபிரிக்க பழமொழி உண்டு “ஆமை மதில் மேல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு யாரோ உதவியிருக்கிறார்கள் என்று பொருள்”. தமிழரசியலில் இப்பொழுது பல ஆமைகள் மதில் மேல் இருக்கின்றன. ஏன் கூரை மேலும் இருக்கின்றன. அந்த ஆமைகளை யார் அங்கே தூக்கி வைத்தது என்ற கேள்வி உண்டு. சில ஆமைகள் ஒரே சமயத்தில் இரு வேறு தரப்புக்களிடம் சம்பளம் வாங்கி வருவதாக பரவலாகச் சந்தேகங்கள் உண்டு.

இது சந்தேகம்தான். இந்த இடத்தில் இதைப்பற்றிக் கதைக்க வேண்டும். ஏனென்றால், நவீன தமிழ் அரசியலில் ஏற்பட்ட ஒரு கூட்டுப் பேரழிவை நினைவு கூர்ந்து முடித்திருக்கும் இக்காலகட்டத்தில் பேசவில்லை என்றால் பிறகு எப்பொழுதும் அதைப்பற்றிப் பேச முடியாது.

தமிழ்மக்களின் தேசத்திரட்சி சிதறிப்போனதன் பின்னணியில்தான் இவ்வாறான சந்தேகங்கள் எழுகின்றன. இந்த சந்தேகங்களுக்கு இரண்டு தரப்புகள் பொறுப்பு.

ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ் மக்களை முழுமையாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது தமிழ்க் கட்சிகள்.

இதில் புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்புகள் நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் உதவிகளைச் செய்கின்றார்கள். ஆனால் அவர்களை அறியாமலேயே அந்த உதவிகள் தமிழரசியற் பரப்பில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. ஓர் இனப்படுகொலைக்குப் பின் தப்பியிருக்கும் மக்கள் என்ற அடிப்படையில் தாயகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்களே உண்டு. அவர்களையும் ரிமோட் செய்ய முற்பட்டால், அது அவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வேட்டைப் பற்களுக்குள் சிக்கவைத்துவிடும் என்பது முதலாவது பயம். இரண்டாவது பயம், வெளியில் இருந்து கிடைக்கும் உதவிகளுக்காக செயற்படுகின்றவர்கள் ஒரு கட்டத்தில் தாமாகச் செயற்பட முடியாத பொம்மலாட்டப் பொம்மைகளாக மாறிவிடுவார்கள். பொம்மைகளால் தேசத்தைத் திரட்ட முடியாது. ஆமைகளாலும் தேசத்தைத் திரட்ட முடியாது.

பொம்மைகளும் ஆமைகளும் தமிழரசியல் பரப்பில் அதிகரித்துவரக் காரணம் அரங்கில் உள்ள தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான். எல்லாருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உண்டு. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ஒரு தேசத்திரட்சியைக் கட்டியெழுப்பத் தவறிய அனைவருக்கும் இதில் பொறுப்பு உண்டு. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தேசத்திரட்சியை கட்டியெழுப்பும் மக்கள் இயக்கமும் கிடையாது. குடிமக்கள் சமூகமும் கிடையாது. கட்சிக் கூட்டுக்களும் கிடையாது. அதனால் கடந்த 14ஆண்டுகளாக தமிழ் மக்கள் அவிழ்த்து விடப்பட்ட பாக்கு மூட்டை போல சிதறிக்கொண்டே போகிறார்கள்.

தமிழ் இளையோர் எப்படி நாட்டை விட்டு வெளியேறுவது என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது, முள்ளிவாய்க்காலில் கடைசிக்கட்டத்தில் எந்த வழியால் தப்பிச் செல்வது என்று சிந்தித்ததைப்போல இருக்கிறது என்று ஒரு செயற்பாட்டாளர் துக்கப்பட்டார்.

சிங்களபௌத்த மயமாக்கல், நிலப்பறிப்பு, பயங்கரவாத தடைச் சட்டத்தை புதுப்பிப்பது, தமிழ்மக்கள் மத்தியில் குழந்தைப்பேறு குறைந்துவருவது, இளையோர் நாட்டை விட்டு வெளியேறத் துடிப்பது போன்றவற்றின் பின்னணியில், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட யாருமே இல்லை. ஆம், யாருமே இல்லை.

அந்த வெற்றிடத்தில்தான் கடந்த 14ஆண்டுகளாக, ஒரு பேரிழப்பை அனுஷ்டிப்பதற்காக பரந்துபட்ட அளவிலான, வெளிப்படைத்தன்மைமிக்க ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கமுடியாத மக்களாகத் தமிழ்மக்கள் காணப்படுகிறார்கள்.

மன்னாரில் இந்துக்கள் கட்டிய வளைவு உடைக்கப்பட்ட பின் அது தொடர்பில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான உரையாடலை தொடக்கி வைப்பதற்கு ஒரு சிவில் சமூகம்கூட தமிழ்மக்கள் மத்தியில் கிடையாது. வடக்கு கிழக்கு இணைப்பு அதிகம் சோதனைக்குள்ளாகி வரும் இக்காலகட்டத்தில் அதுதொடர்பில் வெளிப்படையான உரையாடலைத் தொடங்கி, கிழக்கில் இருக்கக்கூடிய சந்தேகங்களை நீக்குவதற்கு யார் முயற்சிக்கிறார்கள்? சாதி ரீதியாக பிற்படுத்தப்படும் மக்களின் அச்சங்களைப் போக்குவதற்குரிய தமிழ்த்தேசிய வேலைத் திட்டம் யாரிடம் உண்டு?

தமிழ்மக்களை வெளித்தரப்புகள் பிரிக்கப் பார்க்கின்றன, வெளித்தரப்புகள் ஆமைகளையும் பொம்மைகளையும் சம்பளம் கொடுத்து இயக்குகின்றன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பதிலாக தேசத்திரட்சியை உறுதிப்படுத்த வேண்டும். பலப்படுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறிய அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு விகிதளவுக்கு எதிரிக்கு சேவகம் செய்திருக்கின்றன.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்காய்கட்சியாய், பொதுக் கட்டமைப்பாய், சாதியாய், சமயமாய் சிதறிக்கொண்டே போகிறார்கள். இது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகளுக்கே அதிகம் வாய்ப்பானது. தமிழ் மக்களைக் கூறு போடுவதற்கு ஆமைகளும் பொம்மைகளும் தேவையில்லை. தமிழ்க் கட்சிகளே போதும் என்பதுதான் கடந்த 14 ஆண்டுகால அனுபவம்.

●

# மலையகத் தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் வேண்டும்

மலையக மக்களை ஒரு தனித் தேசிய இனமாக பிரகடனப்படுத்தி, தேசிய நீரோட்டத்தில் உள் வாங்கப்பட்டு, ஏனைய சமூகங்களுக்கு அர சாங்கத்தால் வழங்கப்படும் சகல உரிமைகளும் மலையக மக்களுக்கும் கிடைப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என சமூக செயல் பாட்டாளரான பீ. கௌதமன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்று வந்த "மலையகம் 200" நிகழ்வுகளின் இறுதி நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை நுவரெ லியா புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது சமூக செயற்பாட்டாளர் பீ. கௌதமன் மேற்படி விடயங்கள் அடங்கிய தீர்மானங்களை சமர்ப்பித்துள்ளார்.

அதில், மலையக பெருந்தோட்ட மக்கள் குடியிருக்கும் காணியும் குடியிருப்புகளும் கிராமங்களாக மாற்றப்பட்டு, அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின் 40 வருட காலம் குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்க ளாக இந்த நாட்டில் வாழ்ந்துள்ளோம். ஏனைய சமூகங்களை பார்க்கும்போது எமது மலையக சமூகம் பின் தங்கிய சமூகமாக வாழ்ந்து வருகிறது. அவற்றை நிவர்த்தி செய்வதற்காக தீவிர திட்டமொன்றை அரசாங்கம் வடிவமைத்து அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனை அரசாங்கம் வடிவமைக்கும் போது இவ்வளவு காலம் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டிருந்த இந்த சமூகத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதில் விசேடமாக மலையக மக்களுக்கான காணி உரிமை குடியிருப்புகளும் உறுதி செய்யப்பட வேண்டும்.

அது மாத்திரமல்ல, தோட்டப் பகுதியில் உள்ள அனைத்து வைத்திய சாலைகளையும் வைத்திய நிலையங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்று, சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவந்து தேவையான வைத்திய சேவைகளை செய்து கொடுக்க வேண்டும்.

பெருந்தோட்ட பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு தகுதி வாய்ந்த கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்களை நியமித்து, அப்பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றி, கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தொழில்நுட்ப கல்லூரிகள் பல இடங்களில் தமிழ்மொழியில் இயங்குவதில்லை. அவ்வாறான தொழில்நுட்ப கல்லூரிகளை உருவாக்கி தமிழ் மொழியில் கற்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நுவரெலியாவில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும். இதை தவிர 10 ஆண்டு அபிவிருத்தி வேலைத திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டும் - என்றும் கோரப்பட்டது.

(ஐ)

# 33 வருடங்களுக்குப் பின்னர் பொத்துவில் கனகர் கிராம மக்கள் குடியேற்ற ஏற்பாடு

## முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி

காரைதீவு, மே 22

1990 களில் இடம்பெயர்ந்த பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராம மக்கள் 33 வருடங்களின் பின் மீள்குடியேற அனுமதி கிடைத்திருக்கின்றது.

226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது.

காடுமண்டி கிடந்த அப் பிரதேசம் கடந்த சில தினங்களாக ஜே.சி.பி. இயந்திரம் மூலம் துப்பரவாக்கப்பட்டு வருகிறது.

பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் அரச அனுமதியுடன் இப் பணியில் ஈடுபட்டு வருகிறார். கனகர் கிராம மக்களும் படையினரும் சமுகமளித்திருந்தனர்.

பொத்துவில் பிரதேச செயலாளர் மொகமட் இஸ்மாயில் பிர்னாஸ்ஸின் நேரடி கண்காணிப்பில் இத் துப்பரவாக்கும் பணி நடைபெறுகிறது.

60வருடங்களுக்கு முன்பு அங்கு வாழ்ந்துவந்த மக்கள் தமது காணிகளைக் கோரி கடந்த 32 வருடங்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

1960களில் சுமார் 278குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. 1981 களில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் காலத்தில் முன்னாள் எம்.பி. அமரர் எம்.சி.கனகரெத்தினத்தின் முயற்சியால் வீடுகட்ட அரை ஏக்கர் நிலமும் பயிர்செய்ய 2ஏக்கர் நிலமும் தரப்பட்டு 30 வீடுகளைக்கட்டி கொடுக்கப்பட்டு அவர்கள் மகிழ்ச்சியாக சேனைப்பயிர்ச்செய்கையுடன் வாழ்ந்துவந்தனர்.



1990களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அவர்களை கடந்த 32வருடங்களாக அங்கு வனபரிபாலன இலாகா குடியேற அனுமதிக்கவில்லையென்பது பிரதான குற்றசாட்டாகும்.

எது எப்படியிருந்தபோதிலும் அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இன்று மிகவும் பயங்கரமான சூரப்பற்றைகளினால் சூழ்ந்து காடுமண்டிக் காணப்படுகின்றது. அந்தக் காட்டினுள் பாழடைந்து இடிந்து தகர்ந்த நிலையில் அவர்களது 30வீடுகளும் காணப்படுகின்றன. கூடவே அவர்கள் பாவித்த மலசலகூடங்களும் தகர்ந்தநிலையில் காணப்படுகின்றன.

(அ)






# கன்பூசியஸ் நிறுவனத்தை நிறுவ கிழக்கு பல்கலையுடன் ஒப்பந்தம்!


மட்டக்களப்பு, மே 22

**கன்பூசியஸ் நிறுவனத்தை நிறுவுவதற்கு கிழக்கு பல்கலைக்கழகத்துடன் யுனான் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.**

அண்மையில் இந்த இரு பல்கலைக்கழகங்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த இரு பல்கலைக்கழகங்களுக்கும் இடையே ஆசிரியர் உறுப்பினர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள், கூட்டு ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள், கன்பூசியஸ் நிறுவனம் நிறுவுதல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்தவே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகள் முழுவதிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் சீனா கன்பூசியஸ் நிறுவனத்தை நிறுவி வருகின்றது. இந்த நிறுவனத்தை உளவு நடவடிக்



கைக்காக அந்த நாடு பயன்படுத்துகிறது என்று சர்ச்சை கிளம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# திருகோணமலையில் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைப்பு

திருகோணமலை, மே 22

திருகோணமலை பகுதியில் சுத்தமான குடிதண்ணீரை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் புல்மோட்டை, நிலாவெளி, சம்பல்தீவு மற்றும் ஆனந்தகுளம் ஆகிய பகுதிகளை இணைக்கும் குடிதண்ணீர் விநியோகத்துக்கான குடிதண்ணீர் குழாய் பொருத்தும் நடவடிக்கை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

67.3 மில்லியனுக்கும் அதிகமான நிதி உதவியின் ஊடாக மேற்கொள்ளப்படும் இத்திட்டம் 28 கிலோ மீற்றர் பரப்பை கொண்டது. இந்தத் திட்டம் நிறைவடைந்தவுடன் 300இற்கும் அதிகமான புதிய குடிதண்ணீர் இணைப்புகள் வழங்கப்படுவதுடன், திருகோணமலை நகரம் மற்றும் அதை அண்டியுள்ள கிராம பகுதிகளுக்கு தடையின்றி குடிதண்ணீர் வழங்குவதற்காகவே இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, திருகோணமலை, கந்தளாய் ஆகிய நகரங்



கள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டதுடன், அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

தற்போதைய நிலவரம் மற்றும் விஸ்தரிப்புக்கான தேவைப்பாடுகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

# சீர்கேடுகளுடன் பேருந்து நிலையம்; புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை!



கல்முனை, மே 22

கல்முனையில் அமைக்கப்பட்டுள்ள பஸ் தரிப்பு நிலையம் பொதுமக்களின் பாவனைக்கு உகந்த இடமற்றதாக மாறி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கல்முனை பேருந்து தரிப்பு நிலையத்தின் கூரைகள் இடிந்து விழும் நிலையிலும் புறாக்கள் மற்றும் பாம்புகள் போன்ற விஷ ஜந்துக்களின் வாழ்விடமாகவும் காணப்படுகின்றது.

அத்துடன், பேருந்து நிலையத்தின் மலசலகூடம் பராமரிப்பின்றியும், உணவகத்தின் கழிவு நீர் உரியமுறையில் வெளியேற்றப்படாமலும் காணப்படுகின்றது. இதேசமயம், அப்பகுதியில் துர்நாற்றமும் வீசி வருகின்றது.

இந்த பேருந்து நிலையத்தை புனரமைக்குமாறு மக்கள் பல முறை கோரிக்கை விடுத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில், அதனை புனரமைக்க அரசியல்வாதிகள், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கோயில் முன்றலில் தூங்கியவர் பேருந்து மோதியதில் மரணம்!

மட்டக்களப்பு, மே 22

கோயில் முன்றலில் தூங்கிய மனநலன் பாதிக்கப்பட்ட இளைஞரை இ. போ. ச. பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரான்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி சென்றுகொண்டிருந்த ஏறாவூர் சாலைக்கு சொந்தமான பேருந்து கல்முனையில் பயணிகளை இறக்கிவிட்டு, மீண்டும் ஏறாவூர் சாலைக்கு திரும்பியது.

அப்போது, கிரான்குளம் விஷ்ணு கோயிலுக்கு முன்னால் தூங்கிக்கொண்டிருந்த மனநலம் பாதிக்கப்பட்ட 23 வயது இளைஞரை மோதிவிட்டு சென்றுள்ளது.

இந்நிலையில், தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் பேருந்தின் சாரதியை கைது செய்துள்ளனர்.

(ஐ)

# சட்டவிரோதமாக மணல் கடத்திய இருவர் வாகனங்களுடன் கைது!

காத்தன்குடி, மே 22

அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிவந்த இருவரை கைது செய்துள்ளனர். இரண்டு உழவு இயந்திரங்களையும் மணலையும் கைப்பற்றியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸார் நடத்திய கண்காணிப்பு நடவடிக்கையிலேயே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனை ஆதார மருத்துவமனையில் என்பியல் சத்திர சிகிச்சை பிரிவு ஆரம்பம்!

காரைதீவு, மே 22

கல்முனை ஆதார மருத்துவமனையில் நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம், என்பியல் விடுதி மற்றும் என்பியல் சத்திர சிகிச்சை கூட பிரிவுகள் புதிதாக திறக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். சந்திர குப்தா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதில், சுகாதார அமைச்சின் அதிகாரிகள், மருத்துவ நிபுணர்கள், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மருத்துவமனையின அபிவிருத்தி குழுவினர் மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

திறந்து வைக்கப்பட்ட நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம் இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# இரத்த தான முகாம் நடைபெற்றது!

மட்டக்களப்பு, மே 22

மண்முனைப்பற்று - காங்கேயனோடையில் ஜாமிஉல் மஸ்ஜித் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது, மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

ஜாமிஉல் மஸ்ஜித் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் முஜாஹித் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்று குருதிக் கொடை செய்தனர்.

(ஐ)

# போரை முடிவுக்கு கொண்டுவர சகல முயற்சிகளும் செய்வோம்!

## இந்திய பிரதமர் உக்ரைன் ஜனாதிபதிக்கு உறுதி

ரோக்கியோ, மே 22

**போரை முடிவுக்கு கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் இந்தியா மேற்கொள்ளும் என உக்ரைன் ஜனாதிபதியிடம் இந்திய பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் போர் தொடங்கி இன்றுடன் 452 நாட்களை எட்டியுள்ளது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

ரஷ்யாவுக்கு எதிரான போருக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்நிலையில், ஜப்பானில் நடக்கும் ஜி7 மாநாட்டில் அமெரிக்கா, இந்திய உள்ளிட்ட உலகின் முக்கிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். இதில் உக்ரைனின் ஜனாதிபதியும் ஜெலன்ஸ்கியும் பங்கேற்றார்.

நேற்று இருவரும் சந்தித்துப் பேசினர். இதன்போது, "போரை முடிவுக்கு கொண்டுவர இந்தியா மற்றும் தனிப்பட்ட முறையில் என்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.



இந்த மோதலை அரசியல், பொருளாதார கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. இது மனிதாபிமானம், மனித மதிப்பு தொடர்பான பிரச்னையாக பார்க்கிறோம். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நாம் தொலைபேசியில் பேசியுள்ளோம். நீண்ட நாட்களுக்கு பிறகு நாம் நேருக்கு நேர் சந்தித்துள்ளோம். உக்ரைன் போர் ஒட்டுமொத்த உலகத்துக்கும் பெரிய பிரச்னை. ஒட்டுமொத்த உலகத்திலும் பல்வேறு பாதிப்புகளை போர் ஏற்படுத்தியுள்ளது"என்றார்.

# பக்முட் நகரம் ரஷ்யாவின் வசம்

மொஸ்கோ, மே 22

உக்ரைனின் பக்முட் நகரத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஓர் ஆண்டை தாண்டி நீடித்து வருகின்றது.

கிழக்கு உக்ரைனில் உள்ள முக்கிய நகரமான பக்முட்டை கைப்பற்ற ரஷ்ய படைகள் சில மாதங்களாக சண்டையிட்டு வந்தது. இதில் ரஷ்ய தனியார் படையான வோக்னர் குழுவினர் ஈடுபட்டனர். அவர்களை எதிர்த்து உக்ரைன் இராணுவம் கடுமையாக போரிட்டது.

சில நாட்களுக்கு முன்பு பக்முட் நகரின் பெரும்பாலான பகுதியை கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக ரஷ்யா அறிவித்தது. விரைவில் அந்த நகரை கைப்பற்றுவோம் என்று தெரிவித்தது.

இந்த நிலையில் பக்முத் நகரை முழுமையாக கைப்பற்றிவிட்டதாக ரஷ்யாவின் வோக்னர் குழுவின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஷின் தெரிவித்துள்ளார். பக்முட் நகரை முழுமையாக கைப்பற்றிவிட்டோம்.

அந்த நகரின் ஒவ்வொரு வீடும் எங்களது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இனி ஓய்வு எடுப்பதற்காகவும் மறுபயிற்சி பெறுவதற்காகவும் வோக்



னர் குழுவினர் வருகிற 25ஆம் திகதி பக்முட் நகரில் இருந்து வெளியேறுவார்கள் - என்றார்.

பக்முத் நகரை கைப்பற்றிய ரஷ்ய படைக்கு ஜனாதிபதி விளாடிமிர் புடின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆனால், பக்முட் நகர்தில் சண்டை தொடர்கிறது. அதன் மீதான கட்டுப்பாட்டை இன்னமும் இழக்கவில்லை என்று உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# பப்புவா நியூ கினி நாட்டின் மொழியில் திருக்குறள் நூல்

புதுடில்லி, மே 22

இந்திய பிரதமர் மோடி ஜப்பான் பயணத்தை முடித்துக் கொண்டு பப்புவா நியூ கினிக்கு சென்றுள்ளார். அங்கு அவர் திருக்குறள் நூலை அந்த நாட்டு மக்கள் பேசும் 'டோக் பிசின்' மொழியில் வெளியிடவுள்ளார்.

இதனிடையே, சூரியோதயத்துக்கு முன்னர் செல்லும் தலைவர்களுக்கே அந்த நாட்டில் சம்பிரதாயபூர்வ வரவேற்பு அளிக்கப்படுவது வழமையாகும். எனினும், நேற்று மாலை அங்கு சென்ற இந்திய பிரதமருக்கு சம்பிரதாயத்தை மாற்றி வரவேற்பு அளிக்கப்பட்டது.

(ஐ)

# ஒபாமா உட்பட 500 பேருக்கு ரஷ்யாவில் நுழைவதற்கு தடை

நியூயோர்க், மே 22

அமெரிக்காவின் பொருளாதார தடைக்கு பதிலடியாக முன்னாள் அதிபர் ஒபாமா உட்பட 500 பேருக்கு ரஷ்யா தடை விதித்துள்ளது.

2022ஆம் ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்த பிறகு ஐரோப்பிய நாடுகள் பலவும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதில், அமெரிக்கா கூடுதலான பொருளாதாரத் தடைகளை ரஷ்யா மீது விதித்தது.

இந்த நிலையில், "அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா உட்பட 500 அமெரிக்கர்களுக்கு ரஷ்யாவினுள் நுழைய தடை விதிக்கப்படுகிறது", என்று ரஷ்யா வெளிவிவகார துறை அறிவித்துள்ளது.

(ஐ)

# இத்தாலியில் பெருவெள்ளம் பல்லாயிரம் பேர் பாதிப்பு

## 14 பேர் உயிரிழப்பு

ரோம், மே 22

இத்தாலியில் கனமழைக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. பல்லாயிரக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இத்தாலி நாட்டின் வடக்கு பகுதியான எமிலியா ரோமக்னாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அந்த பகுதி முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளித்தது. மின்கம்பங்கள், மரங்கள் சரிந்து விழுந்ததால் நகரம் முழுவதும் இருளில் மூழ்கியது. இதனால் அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த கனமழை காரணமாக அங்கு ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன. கனமழை, வெள்ளத்தால் பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். எனினும், இந்த கனமழை காரணமாக வீடுகள் சேதமடைந்ததால் இதுவரை 14 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் மாயமானதால் அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(ஐ)



# வன்புணர்ந்தவரை கொன்றவருக்கு 6 ஆண்டு சிறை; ரூ. 48 இலட்சம் அபராதம்!

## போராட்டங்களால் தண்டனை இரத்து

மெக்சிக்கோ சிற்றி, மே 22

மெக்சிகோ நாட்டின் நிஹல் கொயொல்ட் நகரை சேர்ந்த பெண் ரொக்ஸ்னா ருயிஸ் (வயது 23). இவருக்கு ஒரு குழந்தை உள்ளது. கணவரின்றி தனித்து வாழும் இவர், துரித உணவகம் ஒன்றில் பணியாற்றுகிறார்.

கடந்த 2021 மே மாதம் ருயிஸூக்கு அந்த பகுதியை சேர்ந்த ஒருவருடன் நட்பு ஏற்பட்டுள்ளது. நெருங்கிய பழகிய இருவரும் ஒருநாள் இரவு மது அருந்தியுள்ளனர். அவர் தனித்து செல்வது சிக்கல் என்பதால் ருயிஸை அந்த நபர் தனது வீட்டில் தங்குமாறு கூறியுள்ளார்.

அங்கு தங்கிய ருயிஸ் நித்திரையில் இருந்த சமயம் அவரின் நண்பர் அவரை வன்புணர்ந்துள்ளார். கோபமடைந்த ருயிஸ் அவரை தாக்கியதில் அந்த நபர் உயிரிழந்தார். இதையடுத்து, அவரின் உடலை மூடையாகக் கட்டியவர் அதை வீதியில் வீசியுள்ளார். அந்தச் சமயம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் சிக்கிச் கொண்டார்.

ருயிஸை கைது செய்த பொலிஸார் அவர் மீது வழக்கு தாக்கல் செய்தனர்.

தொடர்ந்த வழக்கில், வன்புணர்வுக்கு இலக்கான ருயிஸ் கொலை குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தற்காப்பை விட கூடுதல் பலத்தை ருயிஸ் பிரயோகித்தார் என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது.

மேலும் அவருக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது. மேலும், கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கு 16 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 48 இலட்சம் ரூபாய்) இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பு மெக்சிகோ முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதற்கு எதிராக



தொடர் போராட்டங்களில் பெண்கள் ஈடுபட்டனர். இவற்றில் ருயிஸூம் கலந்துகொண்டார்.

தொடர் போராட்டங்களை அடுத்து ரொக்ஸ்னா ருயிஸ் மீது தொடர்ப்பட்ட வழக்குகள் அனைத்தையும் மெக்சிகோ அரசு திரும்பப்பெற்றது. மேலும், அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையும் திரும்பப்பெறப்பட்டது.

(ஐ)



# இறுதி பந்துவரை பரபரப்பு; லக்னோ அபார வெற்றி!

கொல்கத்தா, மே 22

இருக்கையின் நுனிக்கு ரசிகர்களை கொண்டு வந்த போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியை ஓர் ஓட்டத்தால் வித்தியாசத்தில் வீழ்த்தி லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி இறுதிக்கு முந்தைய (பிளே ஒவ்) சுற்றுக்கு முன்னேறியது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் கொல்கத்தா நைற் ரைடர்ஸ், லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா பந்துவீச்சைத் தெரிவு செய்ய அதன்படி, முதலில் லக்னோ அணி களமிறங்கியது.

ஆரம்பத்தில் கொல்கத்தா அணியின் அபார பந்து வீச்சால் லக்னோ விக்கெட்களை இழந்து தடுமாறியது. 73 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்களை இழந்து தத்தளித்த அந்த அணியை ஆயுஷ் பதோனி, நிகோலஸ் பூரண் கூட்டணி கரைசேர்ந்தது.

6வது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 74 ஓட்டங்கள் இணைப்பாட்டம் மூலம் சேர்த்த நிலையில் பதோனி 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் இருந்த நிகோலஸ் பூரண் தொடர்ந்து அதிரடியை வெளிப்படுத்தி அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்களில் வெளியேறினார். இதனால் லக்னோ அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களை எடுத்தது.

கொல்கத்தா சார்பில் ஷர்துல் தாக்குர், வைபவ் அரோரா, சுனில் நரைன் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு இம்முறை தொடக்கம் சிறப்பாக அமைந்தது. பவர் பிளே ஓவர்களில் சிறப்பாக விளையாடிய வெங்கடேஷ் ஐயர் - ஜசன் றோய் கூட்டணி 61 ரன்கள் எடுத்தது. அப்போது வெங்கடேஷ் ஐயர் 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதன்பின் வந்த அணித் தலைவர் நிதிஷ் ராணா, ரஹ்மானுல்லா சொதப்பினாலும் ஜசன் றோய் 45 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

நடுவரிசையில் கொல்கத்தாவின் முக்கிய வீரர் ரஸல் உள்ளிட்டோர் சிறப்பாக விளையாட தவற, சமீப காலமாக இறுதி வீரராக கெத்து காட்டும் ரிங்கு சிங் மீண்டும் ஒருமுறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 27 பந்துகளில் அரைச்சதம் கடந்த அவர் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர காரணமாக இருந்தார். கடைசி 3 பந்துகளில் 18 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவைப்பட, இரண்டு சிக்ஸ், ஒரு பௌண்ட்ரி அடித்து ரசிகர்களை இருக்கையின் நுனியில் அமரவைத்தார். இறுதியில் ஓர் ஓட்டத்தால் கொல்கத்தா தோல்வியை தழுவ, அதே ஓர் ஓட்டம் வித்தியாசத்தில் வென்ற லக்னோ இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

கொல்கத்தா அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்கள் எடுத்தது. இறுதிவரை ஆட்டமிழக்காத ரிங்கு சிங் 67 ஓட்டங்கள் சேர்த்திருந்தார்.

லக்னோ தரப்பில் ரவி பிஷ்னோய் மற்றும் யஷ் தாகூர் தலா இரண்டு விக்கெட் வீழ்த்தினர்.

# இறுதிக்கு முந்தைய சுற்றுக்குள் நுழைந்தது சென்னை அணி!



புதுடில்லி, மே 22

டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி பெற்று இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

224 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை துரத்திய டில்லி அணியின் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய பிருத்விஷா தொடக்கத்திலேயே 5 ஓட்டங்களுடன் கிளம்பினார். வழக்கம் போல டேவிட் வோர்ணர் நங்கூரமிட்டு ஆட, மறுபுறம் வந்த பிலிப் சால்ட் 3 ஓட்டங்களிலும், ரிலீ ரோசோவ் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். தீபக் சஹர் வீசிய 5ஆவது ஓவரில் மட்டும் இந்த இரண்டு விக்கெட்களை இழந்தது டில்லி.

யாஷ் துள் 13 ஓட்டங்களில் வெளியேற, அக்சர் பட்டேல் 15 ஓட்டங்களிலும், அமன் ஹக்கீம் கான் 7 ஓட்டங்களிலும் விக்கெட்டாகி டில்லி ரசிகர்களை வருத்தத்தில் ஆழ்த்தினர். டேவிட் வோர்ணர் மட்டும் சிக்ஸர்களை விளாசி ஓட்டங்களை ஒருபுறம் குவிக்க, டில்லி ரசிகர்கள் ‘தோற்றாலும் டேவிட் வோர்ணரின் போராட்டத்தால் தோற்றோம்’ என்று வரலாறு எழுதட்டும்’ என ஆனந்த கண்ணீரில் ஆறுதல் அடைந்தனர்.

ஓவர் செல்லச் செல்ல டில்லியின் நிலை மோசமடைய 58 பந்துகளில் 86 ஓட்டங்களை குவித்த ‘மீட்பர்’ டேவிட் வோர்ணரும் ஆட்டமிழக்க, 19 ஓவர் முடிவில் 7 விக்கெட்களை இழந்த டில்லி 146 ஓட்டங்களை சேர்த்திருந்தது. 6 பந்துகளில் 78 ஓட்டங்கள் என்ற நிலையில் லலித் யாதவ், அன்ரிச் நோர்ட்ஜே களத்தில் இருந்தனர். லிலித் யாதவ் 6 ஓட்டங்களில் நடையைக் கட்டியதும் அவருக்கு பதிலாக வந்த குல்தீப் யாதவ் பிரிய மனமில்லாமல் அடுத்த பந்தே டக் அவுட்டாகி திரும்ப, அவரை பின்தொடர்ந்து வந்த சேதன் சகாரியாவும் சேம் டக் அவுட்டாக 20 ஓவர் முடிய டில்லியின் 10 விக்கெட்களும் சரியாக முடிந்தன.

இதன் மூலம் 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை வெற்றி பெற்று இறுதிக்கு சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. சென்னை தரப்பில் தீபக் சஹர் அதிக பட்சமாக 3 விக்கெட்களையும், தீக்ஷன, மதீஷ பத்திரண தலா 2 விக்கெட்களையும், துஷார் தேஷ்பாண்டே, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான ருதுராஜ் கெய்க்வாட்டும், டெவோன் கொன்வேயும் இணைந்து டில்லியை பந்தாடினர். 12ஆவது ஓவரில் மட்டும் தொடர்ந்து 3 சிக்ஸர்களை விளாசி ருதுராஜ் அதிரடி காட்டினார்.

14 ஓவர்கள் வரை விக்கெட் இழப்பின்றி பார்த்துக் கொண்ட இந்த இணையை 15ஆவது ஓவரில் சேதன் சகாரியா பிரித்தார். 7 சிக்ஸர்களை விளாசி வெளுத்து வாங்கிய ருதுராஜ் கெய்க்வாட் 50 பந்துகளில் 79 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த சிவம் துபே வந்த வேகத்தில் 3 சிக்ஸ்களை பறக்க விட்டு 22 ஓட்டங்களுடன் அரங்கம் திரும்பினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டெவோன் கொன்வே 52 பந்துகளில் 87 ஓட்டங்களை குவித்தார்.

தொடர்ந்து வந்த ஜடேஜா அடித்த சிக்ஸ் ரசிகர்களுக்கு உற்சாகத்தை கொடுத்தது. இறுதி பந்தில் ஸ்ட்ரைக்கிலிருந்த டோனி தூக்கி அடிக்க சிக்ஸ் தவறியது. அத்துடன், அது ப்றீ ஹிட்டானதால் ரசிகர்கள் டோனியின் சிக்ஸுக்காக காத்திருந்த நிலையில், ஓர் ஓட்டத்துடன் முடிந்த இன்னிங்ஸில் 3 விக்கெட்களை இழந்த சென்னை 223 ஓட்டங்களை குவித்து 224 என்ற கடின இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

டில்லி அணி தரப்பில் சேதன் சகாரியா, கலீல் அஹமத், அன்ரிச் நார்ட்ஜே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# இத்தாலியன் ஓப்பன் ரைபகினா சம்பியன்

ரோம், மே 22

இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் எலீனா ரைபகினா சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இத்தாலியன் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ரோமில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் கஜகஸ்தான் வீராங்கனை எலீனா ரைபகினாவும், உக்ரைன் வீராங்கனை அன்ஹெலினா கலினினாவும் மோதினர்.

இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 6-4 என்ற கணக்கில் ரைபகினா எளிதில் கைப்பற்றினார். இதையடுத்து நடைபெற்ற 2வது செற்றில் 1-0 என ரைபகினா முன்னிலையில் இருந்த போது அன்ஹெலினா கலினினாவுக்கு காயம் ஏற்பட்டதால் அவர் போட்டியில் இருந்து வெளியேறினார்.

கலினினா போட்டியில் இருந்து வெளியேறிய காரணத்தால் ரைபகினா இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸில் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.






# இறுதிக்கு முந்தைய சுற்றில் சென்னை; ஸ்டோக்ஸ் இங்கிலாந்துக்கு திரும்பினார்

சென்னை, மே 2

ஐ. பி. எல். தொடர் இறுதிகட்டத்தை எட்டி விட்டது. லீக் சுற்று போட்டிகள் முடிவடைந்து விட்டன. பிளே - ஓவ் சுற்று சென்னையில் நடக்கவுள்ளது.

இதனிடையே, டோனி இந்த ஐ. பி. எல் தொடருடன் ஓய்வு பெறுவார் என்று தகவல்கள் வெளிவரும் நிலையில் அவருக்கு சம்பியன் பட்டத்தை பரிசளிக்க சென்னை அணியினர் தீவிரமாக முயற்சிப்பர்.

இந்நிலையில், சென்னை அணிக்கு நெருக்கடி அளிக்கும் விதமாக சென்னை அணியின் நட்சத்திரவீரர் பென் ஸ்டோக்ஸ் இங்கிலாந்து திரும்பியுள்ளார்.

நடப்பு ஐபிஎல் தொடரில் ஆட 16.25 கோடி இந்திய ரூபாய்க்கு சென்னை அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்ட ஸ்டோக்ஸ் 2 போட்டிகளில் மட்டுமே ஆடினார். அதன் பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக அவர் போட்டிகளில் ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூன் முதலாம் திகதி அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் தொடங்குவதால், அந்த தொடருக்கு தயாரவதற்கும் அதன் பின்னர் ஆஷஷ் தொடர் நடைபெறவுள்ளதால் அதற்காகவும் அவர் தாயகம் திரும்பியுள்ளார். பென் ஸ்டோக்ஸ் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவராக செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ் காந்தியை கொன்ற புலிகளை இலங்கை அழித்தது!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, மே 22

**“32 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் முன்னாள் பிரதமரை கொலை செய்த பயங்கரவாத அமைப்பை 14 வருடங்களுக்கு முன்னர் இலங்கை அழித்தது”, என்று வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

ராஜீவ் காந்தியின் நினைவு தினமான நேற்று தனது டுவிற்றர் பக்கத்திலேயே அவர் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

அதில், “32 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள், அவர்களின் நிதி திரட்டும் சர்வதேச வலையமைப்பினர், அரசியல் ஆதரவாளர்கள், புலனாய்வாளர்கள் இணைந்து உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் முன்னாள் பிரதமரை கொலை செய்தனர்.

“இலங்கை காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத இயக்கத்தை 14 வருடங்களுக்கு முன்னர் அழித்தது. இலங்கையில் அமைதி சமதானத்தை ஏற்படுத்தியது”, என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சீதாஎலியவிலிருந்து கல் இந்தியாவுக்கு அன்பளிப்பு

கொழும்பு, மே 22

சீதை சிறை வைக்கப்பட்டிருந்த இடம் என்று நம்பப்படும் இடத்தில் இருந்து பெறப்பட்ட கல்லை இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் அன்பளிப்பு செய்துள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட இந்தியாவின் மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ராஜ்குமார் சிங்கை சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன்போது, இந்தியாவுடனான மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இரு தரப்பு ஒத்துழைப்பு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கட்ட இணைப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இராமாயணத்தின்படி சீதை சிறைபிடிக்கப்பட்ட இடம் என்று நம்பப்படும் இலங்கையின் சீதாஎலியாவில் கோயிலுக்கு அருகில் உள்ள ஓடையில் இருந்து பெறப்பட்ட கல்லையும் உயர்ஸ்தானிகர் மொறகொட இந்திய அமைச்சர் சிங்கிடம் வழங்கினார்.



# பொலிஸாரை தாக்கியவர் கைது!

கொழும்பு, மே 22

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கட்டையால் தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்ற முன்தினம் சனிக்கிழமை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொழும்பு - புத்தல நீர் வழங்கல் சபைக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட முற்பட்டுள்ளனர்.

இதன்போதே சந்தேக நபர் ஒரு பொலிஸ் அதிகாரியின் தலையில் தடியால் தாக்கியுள்ளார். அப்போது அங்கிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபரை கைதுசெய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் புத்தல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# சோளம் இறக்குமதிக்கு வரி சலுகை அளிப்பு!

கொழும்பு, மே 22

திரிபோஷா உற்பத்திக்கான சோளத்தை இறக்குமதி செய்வதற்கு வரிச் சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய லங்கா திரிபோஷா நிறுவனத்துக்கு இந்த வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் சோளத்துக்கு 75 ரூபாவாக இருந்த விசேட வர்த்தக வரியை 25 ரூபாவாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வரிச் சலுகை கடந்த 18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பேரீச்சம்பழம் இறக்குமதிக்கு வழங்கப்பட்டு வந்த வரிச் சலுகையும் நீக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ரோஜா பூவுக்கு அதிக கிராக்கி!

கொழும்பு, 22

தற்போது ரோஜா சாகுபடிக்கு அதிக கிராக்கி உள்ளதாக மலர் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெலிமடை, ஊவா பரணகம, கெப்பிட்டிபொல, பொரலந்த, தியத்தலாவ, பண்டாரவளை மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளில் ரோஜா பயிரிடப்படுகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக கோவிட் பாதிப்பு காரணமாக மலர் விவசாயிகள் கடும் நெருக்கடியை சந்தித்து வந்தனர். இருப்பினும், ரோஜா சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரங்கள் விலை குறைந்தால், அது தங்களின் பொருளாதார நிலையில் சாதகமான நிலையை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அனைத்து பல்கலை மாணவர் ஒன்றிய தலைவராக மதுஷான்!

கொழும்பு, மே 22

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய ஏற்பாட்டாளராக மதுஷான் சந்திரஜித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் நடந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடலில் மதுஷான் தெரிவாகியுள்ளார்.

இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் இணைந்த விஞ்ஞான பீடத்தை சேர்ந்த மாணவர் ஆவார்.

இதற்கு முன்னர் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளராக வசந்த முதலிகே இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மது போதையில் அநாகரிகம் 3 பெண்கள், 3 ஆண்கள் கைது!

கொழும்பு, மே 22

மது அருந்திவிட்டு அநாகரிகமாக நடந்து கொண்ட 3 பெண்களும் 3 ஆண்களுமாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதானவர்களில் இருவர் சிறுவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் களுத்துறை - பாணந்துறை பிரதான வீதியிலுள்ள சுற்றுலா விடுதிக்கு அருகில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுற்றுலா விடுதி அருகே மது அருந்திவிட்டு அநாகரிகமாக இவர்கள் நடக்கின்றனர் என்று அப்பகுதி மக்களிடம் இருந்து பொலிஸாருக்கு தொலைபேசி வாயிலாக முறைப்பாடு அளிக்கப்பட்டது. இதையடுத்து பாணந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அந்த இடத்திற்குச் சென்று 6 பேரையும் கைது செய்தனர். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசும் எமது கட்சியும் தயார்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, மே 22

ஜனாதிபதி தேர்தலுக்கு முகங்கொடுக்க அரசாங்கமும் தமது கட்சியும் தயாராக இருக்கின்றன என்று ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டுக்காக உழைக்கக் கூடிய பொது வேட்பாளரை முன் நிறுத்தவுள்ளோம். அவர் நிச்சயமாக நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக வருவார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பெரமுன கட்சியின் கம்பஹா மாட்ட செயல்குழு கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தற்போது நாடு எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது. நாட்டின் இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது.



அதற்குக் காரணம் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான பொருளாதார வேலைத்திட்டமே. எதிர்க்கட்சிகள் இழுத்தடிக்கும்போது இந்த வெற்றியை நாட்டுக்கு வழங்கியுள்ளோம். நாட்டின் பொருளாதார நெருக்கடி தீர்க்கப்படும்போது, மக்கள் தங்கள் விருப்பப்படி ஆட்சியாளர்களை நியமிக்க அனுமதிப்பதுதான் ஜனநாயகம். இந்த ஜனநாயகத்தை நாட்டுக்கு வழங்க கட்சி என்ற ரீதியிலும் அரசாங்கம் என்ற ரீதியிலும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நாட்டு மக்கள் தேசிய தேர்தலை கோருகின்றனர். அதன்படி ஜனாதிபதித் தேர்தலுக்கு எமது கட்சியும் அரசாங்கமும் தயாராகவே உள்ளன. இந்த ஜனாதிபதி தேர்தலுக்கு, உழைக்கக் கூடிய ஒரு பொது வேட்பாளரை முன் நிறுத்துவோம். அவர் இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக நிச்சயம் வருவார். ஏனென்றால் நம் நாட்டின் முற்போக்கு முகாம் இன்னும் நம்மிடம் உள்ளது.

ஜே. வி. பியின் வரலாற்றில் அதிகூடிய தடவைகள் ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் ஜனாதிபதித் தேர்தல் தவிர்க்கப்பட்டது. அவர்கள் உண்மையில் ஜனாதிபதி தேர்தலுக்கு பயப்படுகிறார்கள். ஜே. வி. பி என்பது நடைமுறை அறிவு கொண்ட அரசியல் கட்சியல்ல, ஏனெனில், அது மக்கள் முன் பொய்யான விசித்திர உலகத்தை உருவாக்கியுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## செப்ரெம்பருக்கு...

ஆதரவை வழங்கியது.

இந்த நாடு மீள வேண்டுமானால் அந்த ஆதரவு மிகவும் முக்கியமானது. இந்தநிலையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து. திவால் நிலையில் இருந்து வளமான நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டும்- என்றும் அவர் கூறினார்.

கேகாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி,

கடந்த காலங்களில் இலங்கை வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதலீட்டாளர்கள் எவரும் நாட்டுக்கு வரவில்லை. இந்த சூழ்நிலையிலேயே நாட்டின் பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவேண்டியேற்பட்டது.

சிங்களவராக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் பிச்சைக்காரர்களாக வாழ விரும்புவதில்லை. அவர்கள் கண்ணியத்துடனேயே வாழ விரும்புகின்றனர். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடுமையான நிபந்தனைகளை விதித்திருந்தது. ஆனால் இலங்கைக்கு அவற்றை நிறைவேற்றுவதை தவிர வேறு வழிகள் இல்லை - என்றும் கூறினார். (ஐ)

## கிளிநொச்சி...

அனுப்பும் அதிகாரம் பீடாதிபதிகளுக்கு இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றி, அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் வெட்டுப் புள்ளி அடிப்படையில் பல்கலைக் கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் முதல் பட்டியலின்படி 2021/2022 கல்வி ஆண்டுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டன.

எனினும், உயர்தரப் பெறுபேறுகளின் மீளாய்வுக்கு பின்னர், வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களை வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல் மூலம் அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது.

ஆனாலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் காணப்படும் வளப்பற்றாக்குறை காரணமாக 2021/2022 கல்வி ஆண்டுக்கு அவர்கள் உள்வாங்கப்பட்டனர். ஆயினும், அடுத்த கல்வி ஆண்டுப் பிரிவினருடனேயே அவர்கள் கல்வி கற்க முடியும் என மாணவர்கள் அனுமதிக்காகப் பதிவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்னர். இதையடுத்தே, அனுமதிக்கப்படும் மாணவர்களின் பதிவை நிராகரிக்கும் அதிகாரம் பீடாதிபதிக்கு இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பொறியியல் பீடத்தால் அனுமதிக்கப்படக் கூடிய மாணவர்களின் தொகை என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு உட்பட்டே வெற்றிடங்கள் நிரப்பும் பட்டியலும் தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை அனுமதிப்பதில்லை எனப் பீடம் முடிவெடுக்க முடியாது. மானியங்கள் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்படும் மாணவர்களை அனுமதித்தே ஆக வேண்டும். அனுமதிக்க முடியாத நிலைமை இருந்தால் பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பீடாதிபதி அது பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்திருக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## பொறுப்புக்...

வெளிவிவகார அமைச்சர் அறிக்கை வெளியிட்டார்.

இந்த நிலையில் இந்த விடயம் குறித்து சுமந்திரன் கருத்து வெளியிடுகையில்,

"யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட கடந்த 14 வருடங்களில் அரசாங்கம் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. காலந்தாழ்த்திவிட்டு, குறித்த விடயத்தை ஏனைய சர்வதேச நாடுகள் வலியுறுத்திக் கூறியவுடன் கோபப்படுவதில் எந்தவித அர்த்தமுமில்லை.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முன்னின்று செயற்பட்ட நாடுகளில் கனடாவும் ஒன்று. கனடா மட்டுமல்ல ஏனைய சர்வதேச நாடுகளும் இவ்விடயத்தை வலியுறுத்தி வருகின்றன. இது தொடர்பில் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத பட்சத்தில் சர்வதேச சமூகம் நிச்சயமாக அழுத்தங்களை பிரயோகிக்கும்.", என்றார். (ஐ)

## தனியார்...

மாணவர்கள் தற்போது கைபேசிக்குள் மூழ்கி இருக்கிறார்கள். அதிலிருந்து மாணவர்களை விடுபடவைக்க கலை செயல்பாடுகளுக்குள் ஈடுபடுத்த வேண்டும். வாரத்தில் ஒரு நாளாவது மாணவர்களை கலைச் செயல்பாடுகளில் ஈடுபட இடமளிக்கவேண்டும்.

என்னுடைய அடுத்த முயற்சி வாரத்தில் ஒருநாள் குறிப்பாக ஞாயிறுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான செயல்பாடுகளை முன்னெடுப்பதே - என்றார்.

## சிங்கள...

தெரியாது.

ஆரம்பத்தில் இருந்தவர்கள் தனியே தமிழீழ விடுதலை புலிகள் மட்டுமல்ல. ஈ. பி. டி. பி., ரெலோ போன்ற அமைப்புகளும் இங்கு இருந்தன. அந்தக் காலப் பகுதியிலேயே பௌத்த விகாரைகள் உடைக்கப்பட்டன. ஆனால், அதை நேரடியாக விடுதலைப் புலிகள் எனக் கூற முடியாது. இதை யார் செய்தார்கள் என புரிந்தே பதிலளிக்க வேண்டும்.

புத்தர் இந்து முறைப்படியே வாழ்ந்தவர். ஆனால் தற்போது அனைவரும் சிங்கள - பௌத்தம் என தெரிவிக்கின்றனர். அது தவறானது." என தெரிவித்துள்ளார்.

## ஜி.எஸ்.பி....

மேற்கொள்ளப்பட்ட விரிவான பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து கருத்துத் தெரிவித்த, வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பணிப்பாளர் ஷோபினி குணசேகர இத னைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடைசி ஜி.எஸ்.பி. பிளஸ் மதிப்பாய்வு அறிக்கையை அடுத்த மாதத்திற்குள் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடவுள்ளது.

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றில் சர்வதேச தரத்துடன் தொடர்புடைய 27 உடன்படிக்கைகளுக்கு இலங்கை தனது உறுதிப்பாட்டை எவ்வாறு நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது குறித்த மதிப்பீட்டை இந்த ஆவணம் கொண்டிருக்கும்.

இலங்கை 2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஜி.எஸ்.பி. பிளஸ் முன்னுரிமை அந்தஸ்துக்கு மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும். இதன்போது தற்போதைய ஒழுங்குமுறையின் கீழ் 27 உடன்படிக்கைகளுக்கு அளித்த உறுதிமொழிகளைச் செயல்படுத்துவதை நிரூபிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை நிர்வாகத்துக்கு 15 அமைச்சுகள் போதும்!

## - ஆய்வில் தகவல் -

கொழும்பு, மே 22

அரசாங்கத்தின் நிர்வாகத்தை 30 அமைச்சுகளுடன் தொடர்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்த போதிலும், 15 அமைச்சுக்கள் உகந்ததாக இருக்க முடியும் என்றும் வெரிடே றிசேர்ச் நிறுவனத்தின் ஆய்வு தெரிவித்துள்ளது.

கடந்த மே 17 அன்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட தகவலில் தற்போது, சுமார் 30 அமைச்சுக்கள் உள்ளன என்று குறிப்பிட்டிருந்தார். அதனை விரிவுப்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இலங்கையில் அமைச்சரவை அமைப்பதற்கான ஒரு பகுத்தறிவு முறை என்ற தலைப்பில் தாம் 2020இல் வெளியிட்ட வெள்ளை அறிக்கையின் 15 அமைச்சுகளை வெரிடே ஆய்வு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அவையாவன, நிதி மற்றும் திட்டமிடல், நீதி, பாதுகாப்பு, கல்வி மற்றும் ஆராய்ச்சி, ஆரோக்கியம், விவசாயம், உழைப்பு, பொது பயன்பாடுகள், துறைமுகங்கள்,கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து, பொருளாதார விவகாரங்கள், உள்துறை மற்றும் பொது நிர்வாகம், வெளியுறவு, குடும்பம் மற்றும் சமூக வளர்ச்சி, சமூகம் மற்றும் கலாசாரம், சுற்றுச்சூழல் ஆகிய அமைச்சுகளையே குறித்து ஆய்வு பரிந்துரைத்திருந்தது.

இதேவேளை துண்டு துண்டாக - தொடர்புடைய துறைகள்,வெவ்வேறு அமைச்சுக்களாக பிரிக்கப்பட்டு, தவறான சீரமைப்பு காரணமாகவே கடந்த காலங்களில், அதிகரித்த செலவுகள், முடிவெடுப்பதிலும் செயல்படுத்துவதிலும் தாமதங்களை உருவாக்கின. அத்துடன் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் திறனைக் குறைத்தது என்று வெரிடே ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் 15 அமைச்சுக்களும் உகந்த முறையில் வடிவமைக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று வெரிடே ஆய்வு தெரிவித்துள்ளது. (ஐ)

# சிறுபோக விவசாயிகளுக்கு இன்று முதல் வவுச்சர் வழங்கல்!

கொழும்பு, மே 22

சிறு போகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்வதற்கான மானிய வவுச்சர்கள் வழங்கும் நடவடிக்கை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறு போகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இரசாயன அல்லது சேதன உரங்களை கொள்வனவு செய்வதற்கு மானிய வவுச்சர்கள் வடிவில் நிதி ஒதுக்கீடுகளை வழங்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியின் பிரகாரம் 6 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு 20 ஆயிரம் ரூபாயும் இரண்டு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் ரூபாயும் மானியமாக வழங்கப்படும்.

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் இவ்வருடம் சிறு போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள 6 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த வவுச்சர்கள் வழங்கப்படுவதாகவும், இந்த வவுச்சர்கள் மூலம் விவசாயிகள் இரசாயன உரங்கள் அல்லது சேதன உரங்களை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளின் விருப்பத் திற்கிணங்க, இரண்டு அரச உர நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் இரசாயன அல்லது சேதன உரங்களை அனைத்து உழவர் சேவை மையங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் கொள்முதல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ஐ)

## 59 மருத்துவ...

ஆகவே, பொதுமக்கள் எச்சரிக்கையுடனும் பாதுகாப்புடனும் செயல்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

மேலும், கடந்த ஜனவரி மாதம் முதல் நிறைவடைந்த காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 35 ஆயிரத்து 675 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள்.

கடந்த முதலாம் திகதியில் இருந்து நேற்று முன்தினம் வரையில் 5,967 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கொழும்பு, கம்பஹா மற்றும் ஆகிய மாவட்டங்களில் அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டம், வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோய் பரவல் தன்மை தீவிரமடைந்துள்ளது.

சுற்றுப்புற சூழலில் நீர் தேங்கியிருக்காத வகையில் சூழலை பாதுகாப்பாக வைத்திருக்க பொதுமக்கள் பொறுப்புடனும் அவதானத்துடனும் செயல்பட வேண்டும் - எனவும் அவர் கூறினார். (ஐ)

## நாணய...

வழங்கி - ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண் டும். ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றும் மூன்று மூத்த சட்ட வல்லுநர்கள், அதற்கு தேவையான அடிப்படை செயல்பாடுகளை ஏற்கனவே தொடங்கி விட்டனர் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## கனினி...

பொருட்கள், ஆடைகள், தோல் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், உதிரி பாகங்கள், தொழில்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருட்கள், குளியலறை பொருட்கள், பீங்கான்கள் உள்ளிட்ட சுமார் ஆயிரம் பொருட்களுக்கான தடையே நீக்கப்படுவதற்கான பரிசீலனையில் உள்ளது. (ஐ)

## இந்துக்களும்...

வருகின்றன.

அண்மையில், இந்நாட்டில் பிரசங்கம் செய்த ஒரு போதகருக்கு எதிர்ப்பு தெரிவித்து கத்தோலிக்க பாதிரியார்களால் திட்டப்பட்டதை பார்த்தோம். இந்த நிலைமைகளில் இருந்து சமுதாயத்தை காப்பாற்ற உங்களுடன் சேர்ந்து எங்கள் உயிரை தியாகம் செய்ய தயாராக இருக்கிறோம்", என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இந்து, பௌத்தம், இஸ்லாமியர்களிடம் மன்னிப்பு கேட்டார் போதகர் ஜெரோம்!

## உண்மையை கூறியதற்காக அல்லவாம் உணர்வுகளை காயப்படுத்தியதற்காகவாம்

கொழும்பு, மே 22

இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகியவற்றை அவமதிக்கும் விதத்தில் தெரிவித்த கருத்துக்களுக்காக மன்னிப்பு கோருவதாக போதகர் ஜெரோம் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு மீண்டும் வருவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மிரிஹானையில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் காணொலி வாயிலாக பங்கேற்ற அவர், தனது வார்த்தைகள் உணர்வுகளை புண்படுத்தியிருந்தால் அதற்காக பௌத்தர்கள், பௌத்தமதகுருமார்கள் இந்து சகோதரர்கள், இஸ்லாமிய சகோதர, சகோதரிகளிடம் மன்னிப்புக் கோருகிறேன் என்று அவர் கூறினார்.

பௌத்த மதகுருமாரிடம் நான் பணிவுடன் மன்னிப்பு கேட்கிறேன். ஆனால், நான் உண்மையை தெரிவித்தமைக்காக மன்னிப்பு கோரவில்லை. உணர்வுகளை காயப்படுத்தியமைக்காக மன்னிப்பு கோருகின்றேன் - என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜெரோம் பெர்ணான்டோ தான் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை தனது சட்டத்தரணிகள் மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# மேல், தென் மாகாணங்களில் 100 மி. மீ. வரை மழைய பெய்யும்!

கொழும்பு, மே 22

மேல் மாகாணத்திலும் இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு கடும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை வரையும் இந்த கனமழை நீடிக்கும். தென்மேற்குப் பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் மேல் மாகாணத்தில் இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# ஆயுதங்கள், போதைபொருளுடன் ஏழு பேர் கொழும்பில் கைதாகினர்!

கொழும்பு, மே 22

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு - பொரளை - காதர் நானாவத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கூரிய ஆயுதங்களுடன் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் காதர் நானாவத்தே மல்லிய என்ற பல குற்றச்ஜெயல்களுடன் தொடர்புடையவரும் அடங்குவார் என்று தெரிவிக்கப்படுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 8 வாள்கள், கத்திகள், ஐஸ் மற்றும் கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுடன என்றும் பொரளை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பளை பிரதேச மருத்துவமனையின் பணிப்பாளராக சிவரூபனே வேண்டும்!

## பளை மக்கள் நேற்று போராட்டம்

கிளிநொச்சி, மே 22

பளை மருத்துவமனை பொறுப்பதிகாரியாக மருத்துவர் சின்னையா சிவரூபனை மீண்டும் நியமிக்குமாறு வலியுறுத்தி பி தெரிவித்தனர்.

அதில், மருத்துவர் சிவரூபன் கடந்த 18.08.2019 அன்று பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 09.02.2023 அன்று எவ்வித குற்றச்சாட்டு களும் இல்லாமல் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொடர்ந்து பளை மருத்துவமனையில் பதில் கடமையில் ஈடுபட்டுவரும் நிலையில், அவரை பொறுப் புகளுடன் மீண்டும் நியமிக்கக் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது - என்று கூறினர். (ஐ)

# 8 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

வடமராட்சி, மே 22

பருத்தித்துறையில் தெரிவு செய்யப்பட்ட 18 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஜேர்மனி ஸ்ருற்காட் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கும் "உறவுகளுக்கு கரம் கொடுப்போம்" அமைப்பின் நிதி பங்களிப்புடன் வடமராட்சி ஊடக இல்லத்தின் அனுசரணையுடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அமரர் வைத்திலிங்கம் அம்பலத்தின் 22ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

கரகம்பனை பிரதேசத்தில் உதவி தேவைப்படுவோர் என்று அடையாளம் காணப்பட்ட 18 குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த குடும்பங்களுக்கு ஆயிரத்து 800 ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)




# இலங்கை இளைஞர் ஆஸியில் சடலமாக மீட்பு

கொழும்பு, மே 22

இலங்கையை இளைஞர் ஒருவர் அவுஸ்திரேலியாவின் - ஹோபார்ட் நகரில் டிரன்மரே பொய்ன்ட் என்ற இடத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஹோபார்ட் நகர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இறந்தவருக்கு 18 - 25 வயது இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரின் மரணம் தொடர்பில் சந்தேகம் உள்ளதாக தெரிவித்த பொலிஸார் மருத்துவ பரிசோதனைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தனர்.

இளைஞன் வேறு ஒருபகுதியில் நீரில் விழுந்திருக்கலாம். அல்லது அங்கு போடப்பட்ட அவரின் உடல் இந்த பகுதிக்கு அடித்துவரப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

# ஜனாதிபதி ரணில் இன்று ஜப்பான் பயணமாகிறார்!



கொழும்பு, மே 22

சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவுள்ளார்.

ஐந்து நாட்கள் சுற்றுப் பயணம் செல்லவுள்ள அவர் இன்றைய தினம் ஜப்பான் பயணமாகிறார்.

இந்தப் பயணங்களின்போது அவர், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லூங் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். (ஐ)

# மரப் பலகைகளை கடத்தியவர் கைது



புத்தளம், மே 22

சட்ட விரோதமாக மரப் பலகைகளை கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவர் புத்தளம் பிராந்திய பொலிஸ் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

சட்ட விரோதமாக மரப் பலகைகளை டிப்பர் வாகனத்தில் கடத்திச் செல்வதாக புத்தளம் பிராந்திய பொலிஸ் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொலிஸார் புத்தளத்தின் கல்குளம் பகுதியில் வைத்து டிப்பர் வாகனத்தை பொலிஸார் நேற்று முற்றுகையிட்டனர்.

இதன்போது, அந்த வாகனத்திலிருந்து தேக்கு மற்றும் பாலை மரப் பலகைகள் கைப்பற்றப்பட்டன. மரப் பலகைகளை கடத்திச் சென்றுகொண்டிருந்த நபர் கைதுசெய்யப்பட்டார் என்று புத்தளம் பிராந்திய பொலிஸ் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளம் - கல்குளத்தை சேர்ந்தவர் ஆவார்.

சந்தேக நபரை புத்தளம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.